# சிறுவர் குரல்

இதழ் - 02 (ஆகஸ்ட் அக்டோபர் 2006) தொனி - 01



Funded by save the Children in Sri Lanka

வெளியீடு
அரும்புகள் சிறுவர் கழகம்
இளந்தளிர் சிறுவர் கழகம்
சிறகுகள் சிறுவர் கழகம்
தென்றல் சிறுவர் கழகம்
தேன் தமிழ் சிறுவர் கழகம்
வளர் பிறை சிறுவர் கழகம்

உதவி
விழி உளசமூக மேம்பாட்டு மையம்

ஆசிரியர் குழு
அ. நிரோஜினி
கி. விமலர்
சே. நிரோஜினி
த. டிர்சன்
ஞ. செலஸ்ரீன்
பீ. பியூட்சன்
அ. றொ அனோஜன்

கணனி வடிவமைப்பு
செல்வி. ப. அனுஜா

## தேசிய சிறுவர் ஆண்டு

2006ஆம் ஆண்டு சிறுவர்களுக்கான ஆண்டாக எமது இலங்கை அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் ஏனைய ஆண்டுகளை விட சிறுவர் தொடர்பான பல்வேறு விடயங்களையும் முன்னெடுக்க சிறுவர்களாகிய எமக்கு நல்லதொரு வாய்ப்பு கிடைத்துள்ளது. இச்சந்தர்ப்பத்தை நாம் ஒவ்வொருவரும் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

பிள்ளைகளாகிய எம்மை வளர்ந்தவர்கள் மதிப்பதில்லை ஏற்றுக் கொள்வதில்லை. எமது கருத்துக்களுக்கு செவிமடுப்பதில்லை இவ்வாறெல்லாம் நாம் பலமுறை கூறிக் கவலைப்பட்டுள்ளோம். ஆனால் இவ்வருடம் எமக்குக்கிடைத்துள்ள சந்தர்ப்பங்களை சரியான முறையில் பயன்படுத்தி சிறுவர்களாகிய நாம் எமது பெற்றோருக்கு ஆசிரியருக்கும் சமூகத்தில் உள்ள ஏனையோருக்கும் எமது அரசாங்கத்திற்கும் எமது விருப்பங்களையும் கருத்துக்களையும் தெரிவிக்க முன்வர வேண்டும்.

எமது கருத்துக்களை கதைகளாக கவிதைகளாக ஓவியங்களாக கவரொட்டியாக பிரசுரங்களாக நாம் வெளிப்படுத்தலாம்.

பிள்ளைகள் தெரிவிக்க விரும்பும் கருத்துக்களை சேகரித்து அவற்றை ஆக்கங்களாகவும் பிரசுரிக்கவும் அவற்றை உரியவர்களுக்கு எடுத்துச் செல்லவும் நாம் தயாராக உள்ளோம். இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்த ஒவ்வொரு பிள்ளைகளையும் முன்வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- ஆசிரியர் குழு

## பொருளடக்கம்

01. நெருப்பின் சுயசரிதை
02. நூல் நிலையம்
03. குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே - 02
04. சும்மா இருக்கும் அம்மா
05. உறுப்புக்களின் உயிர்கள்
06. சிறுகதை பேராசை
07. அம்மா உன் மடியில்
08. மரத்திலே பூக்காத பூ
09. பொறுப்பாக நடந்து கொள்ளுங்கள்
10. சுட்டிப் பயலே
11. ஏமாந்து போன வேலைக்காரர்கள்
12. காலைக்காட்சி
13. அன்பு
14. சிரிப்பின் வகைகள்
15. பாடி ஆடுவோம்.
16. சமூகம்
17. வாழ்க்கை
18. தமிழ் மொழி
19. ஆத்திரம் அறிவைக் கொடுக்கும்
20. என்னைப் பார்
21. பூக்களாம்
22. இயற்கை அன்னை அழகு.
23. இலட்சியம்
24. குயில் பாடல்
25. கவிதை
26. கல்வி
27. நட்பு
28. இலங்கை ஓர் அழகான தீவு
29. தாய் மனசு (சிறுகதை)
30. தயக்கம்
31. கவிதை முன்னுரிமை
32. அதிகரித்து வரும் குற்றச்செயல்களும் சீரழிந்து
33. நாகராஜாவும் எறும்புகளும்
34. முட்டாள்ச் சிங்கம்
35. இளம் சாதனையாளர்
36. யாழ் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு உடனான நேர்காணல்



## நெருப்பின் சுயசரிதை

என்னை அறியாதவர் எவரும் இந்த உலகில் இருக்க முடியாது. என் துணையின்றி எவருமே பதப்படுத்திய உணவை உட்கொள்ள முடியாது. என்னைப் பயன்படுத்தி உணவைச் சிலர் வெதுப்புகின்றனர், சிலர் வேக வைக்கின்றனர். சிலர் வறுக்கின்றனர், சிலர் கொதிக்க வைக்கின்றனர், சிலர் பொரிக்கின்றனர் இன்னும் என்னவோ முறைகளில் என்னைப் பயன்படுத்தி உணவுகள் தயாரிக்கின்றனர். நான் இல்லையென்றால் உங்களால் உணவைச் சமைக்கவே முடியாது. இப்போது உங்களால் என்னை இனங்காண முடிகிறதா? ஆம் நான்தான் நெருப்பு.

எனக்கு ஒரு சகோதரன் உண்டு. நான் எங்கெங்கு இருப்பேனோ அங்கெல்லாம் அவனும் இருப்பான். அவன் பெயர் புகை. அதனால் உலக மக்கள் எங்கள் இருவரையும் தொடர்புபடுத்தி ஒரு பழமொழியைக் கூறுவார்கள். "நெருப்பு இல்லாமல் புகை வராது" என்பது அப்பழமொழி ஆகும். எனக்கும் என் தம்பிக்கும் ஒரே ஒரு வித்தியாசம், பொதுவாக நான் சிவப்பு நிறம். என் தம்பி கறுப்பு நிறம். வேறுபாடின்றி நாங்கள் ஒற்றுமையாகவே செயலாற்றுவது உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்காகத்தான். என்னைப் பயன்படுத்த மனிதன் எப்படிக் கற்றுக் கொண்டான் என என்னால் திடமாகக் கூறமுடியாது. இடி விழுந்த மரத்திலிருந்தோ மூங்கில் முதலியன உராய்வதாலோ என்னைப் பற்றி மனிதன் அறிந்து கொண்டான்.

ஆரம்பத்தில் இயற்கையில் உண்டாகும் என்னைப் பாதுகாத்துப் பயன்படுத்திய மனிதன் காலப்போக்கிலே செயற்கை முறையில் என்னை உண்டாக்க முயன்றான். என்னை எவ்வாறு மூட்டலாம் எனப் பல முறைகளை ஆராய்ந்த பின்னர் நவீன தீக்குச்சிகளை செய்யக் கற்றுக்கொண்டான். விஞ்ஞானம் வளர்ந்ததன் காரணத்தால் பல்வேறு வடிவங்களில் இன்று நான் உங்களுக்குப் பயன்படுகிறேன்.

பல புராணக் கதைகள் என்னைப் பற்றிக் கூறுகின்றன. "பாரசீக இலக்கியத்தில் ஒரு வீரன் வேதாளத்தோடு போராடியபோது அவன்

வீசியெறிந்த ஒரு கல் குறி தவறி பாறை மீது பட்டதாம். அப்பொழுது பொறி வடிவில் அங்கு நான் இருந்ததாக அக்கதை கூறுகின்றது". கிரேக்க மக்களோ சுவர்க்கத்திலிருந்து வந்த "செம்பூதம்" என என்னைக் கருதுகின்றனர்.

பண்டைய புராணக் கதைகள் எல்லாவற்றிலும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட வகையிலேயே என்னைப் பெற்றுக்கொண்டதாயும் கடவுளின் ஒரு கொடையாகவும் கடவுளின் ஒரு நியதியாகவும் என்னைக் கூறும் கதைகள் உள்ளன. அன்றும் இன்றும் பல்வேறு இனத்தவர்கள் என்னைத் தெய்வமாகப் போற்றி வழிபட்டு வருகின்றனர்.

ரேகா ஸ்ரீபரன்
யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்.

## நூல் நிலையம்



"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்பது ஆழ்ந்த அறிவுடைய ஆன்றோர் அருளிய அமுத வாக்காகும். இதற்கமைய நாம் பூரண மனிதர்களாக உருவாகுவதற்கு நூலகம் உதவி செய்கின்றது. நூலகம் என்பது பல பல நூல்களைத் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு பிரத்தியோகமான இடமாகும். இந்த நூலகத்தினால் மாணவர்களும், ஏனையவர்களும் பயன் பல பெறுகின்றனர்.

இந்த நூலகத்திலே பல அறிவியல் சார்ந்த நூல்களும் மாணவர்களின் பாடத்திட்டத்துடன் தொடர்பான புத்தகங்களும், பயிற்சிப் பனுவல்களும் காணப்படுகின்றன. இவ்வாறு எல்லா வகையான புத்தகங்களையும் எல்லா மாணவர்களாலும் தனித் தனியே வாங்கிப் பயில்வதென்பது இயலாத காரியமாகும். இதனால் எல்லா மாணவர்களும் தமது அறிவினை வளர்த்துக் கொள்ள நூலகத்தை பயன்படுத்தலாம். மேலும் நூலகத்தில் நூல் வகைப்படுத தப்பட்டுள்ளதால் அவற்றைத் தேடி எடுத்து பயில்வது சுலபமாக இருக்கும்.

இந்த நூலகத்தினால் மாணவர்கள் மட்டுமின்றி சமூகத்திலுள்ள ஏனையவர்களும் பயன் பல பெறுகின்றனர். வீடுகளில் ஓய்வாக இருக்கும் பொழுது நல்ல நூல்களை வாசிப்பதற்கு நூலகம் உதவுகின்றது. எல்லா வகையான பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் நூலகத்தில் சென்று வாசிக்க முடிகின்றது. நூலகத்தை இனிவரும் சந்ததியினருக்கும் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் நாம் நூல்களைக் கவனமாக பாவிக்க வேண்டும். நூல்களின் அரும் பெரும் பொக்கிசமான நூலகத்தை உரிய முறையில் பயன்படுத்தி பூரண மனிதர்களாக உருவாகலாம்.

கபிலா புலேந்திரன்
யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்.

## குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே – 02
## தொடர்பாடலுக்கான புதிய ஒழுக்க நெறி

குழந்தைகளுடனான புதிய தொடர்பாடல் ஒழுக்கநெறி தேர்ச்சியினையும் கௌரவித் தலையும் அடிப்படையாகக் கொண்டது. இது தகவல்கள் குழந்தைகளதும், பெற்றோர்க ளதும் சுயகௌரவத்தை பேணுவதாக அமைவதையும், அறிவுறுத்த ல்களையும், ஆலோசனைகளையும் விட புரிந்துணர்வை வெளிப்படுத்துவதையும் கோரி நிற்கின்றது.

எரிக், வயது ஒன்பது, கடும் கோபத்துடன் வீடுக்கு வந்தான். அவனது வகுப்பு அன்று ஒரு சுற்றுலா போக ஏற்பாடாகி யிருந்தது. ஆனால் அதை மழை வந்து குழப்பி விட்டது. தாய் ஒரு புதிய அணுகுமுறையை கையாள்வது என்று தீர்மானித்தாள். கடந்த கால அணுகுமுறைகள் மோசமாக்கவே செய்தன என்பதால் அவற்றைத் தவிர்க்கவே அவள் விரும்பினாள்:

"மழையினால் நின்று போன சுற்றுலாவுக்காக அழுவதில் பயனி ல்லை".

"இப்படியான சந்தோஷங்களுக்கு இன்னுமொரு நாள் வரும் தானே". "மழையை நானா வரச் செய்தேன்... உனக்குத் தெரியும் தானே... அப்ப

ஏன் என்மீ:து ஆத்திரப்படுகின்றாய்".

இது அவளது கடந்த கால அணுகுமுறை.அவளுடைய புதிய அணுகு முறை இப்படியிருந்தது. தாயார் தனக்குள் சொல்லிக்கொண்டாள்:

"இன்றைய சுற்றுலா குழம்பியது மகனை மிகவும் பாதித்துள்ளது. இவன் ஏமாற்றம் அடைந்து போய் இருக்கிறான். தனது ஏமாற்றத்தை என் மீது கோபிப்பதன் மூலம் பகிர்ந்து கொள்கிறான். அவனுக்கு அவனது உணர்ச்சிகளைக் கொண்டிருக்க உரிமையிருக்கிறது. அவனது உணர்வுகளைக் கௌரவிக்கவும், அவற்றைப் புரிந்து கொள்ளவும் செய்கிறேன் என்று காட்டுவதன் மூலம் அவனுக்கு என்னால் உதவ முடியம்." எரிக்கிடம் அவள் சொன்னாள்.

தாய்: உனக்கு சரியான ஏமாற்றமாகப் போய் விட்டது என்ன?

எரிக்: ஓம்......... நிறைய..........

தாய்: நீ எல்லாத்தையும் தயார் பண்ணியிருக்க இந்தப் பாழாய்ப் போன மழை வந்து கெடுத்து விட்டது.........

எரிக்: ஓம்......... அது தானே.........

(சில கணம் எரிக் மௌனமாக இருந்தான். பிறகு தானாகவே சொன்னான்) "ம்....... பரவாயில்லை...... இன்னுமொரு நாள் வராமலா போகப் போகிறது...."

அவனது கவலை மறைந்து போய் விட்டது. அன்று மாலை முழுவதும் அவன் மிகவும் இயல்பாகவே இருந்தான். வழமையாக எரிக் கோபத்துடன் வரும் போது அந்த வீடு இரண்டு பட்டுவிடும். அவன் அந்த வீட்டினுள் ஒவ்வொருவரையும் ஏதாவது ஒரு காரணத்தை வைத்துச் சீண்டிக் கொண்டேயிருப்பான். கடைசியாக அவன் களைத்துப் போய் தூங்கும் வரை அங்கு அமைதியே இருக்காது.



இந்த அணுகுமுறையில் அப்படி என்னதான் சிறப்பம்சம் இருந்தது? இதிலிருந்த பயன்மிக்க பகுதிகள் தான் என்ன?

ஒரு குழந்தை தீவிரமான உணர்வுகளால் பாதிக்கப்பட்டிருக்கும் போது அது ஒருவரையும் கணக்கெடுக்க மாட்டாது. அது புத்திமதியையோ, சமாதானத்தையோ, ஆக்கபூர்வமான

விமர்சனத்தையோ ஏற்றுக்கொள்ளத் தயாராக இராது. தனது மனதில் தான் அனுபவித்துக் கொண்டிருக்கும் அவஸ்தைகள் தான் அதை முழுமையாக தெரிவிக்காமலேயே பிறரால் விளங்கிக் கொள்ளப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கிறது. தனது உணர்வுகளில் ஒரு பகுதியை மட்டும் வெளியிட்டுவிட்டு மற்றவற்றை நாம் ஊகித்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

ஒரு குழந்தை எம்மிடம் 'இன்று ஆசிரியர் எனக்கு அடித்து விட்டார்' என்று சொல்லும் போது நாம் அது தொடர்பாக மேலதிக விபரங்களைக் கேட்கக் கூடாது. அது மட்டுமல்ல. 'நீ என்ன செய்தாய்.......? உன்னை ஆசிரியர் அடித்தார் என்றால், நீ ஏதாவது செய்திருக்க வேண்டும். என்ன செய்தாய்? என்று கூறுதலும் கூடாது, நாம் அது அடிக்கப்பட்டதற்காக கவலைப்படுவதாக சொல்வதும் கூட (Sorry) தேவையற்றது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் அதன் உணர்வுகளை, கவலையை, அதனது அந்தரமான நிலையை, வெட்கத்தை, பழிவாங்கும் ஆத்திரத்தை எல்லாம் புரிந்து கொள்வதாகக் காட்ட வேண்டும். அதனது உணர்வுகளை எப்படி நாம் அறிவது? அதைக் கவனிப்பது, அது பேசுவதைக் கேட்பது என்பதன் மூலமாகத்தான். அத்துடன் எமது சொந்த உணர்வுகளையும் வெளிப்படுத்த வேண்டும். தனது சகாக்கள் மத்தியில் அவமானப்படுகின்ற ஒரு குழந்தை எப்படி உணரும் என்பதை நாம் அறிவோம். எனவே அதன் உணர்வை நாம் புரிந்து கொண்டுள்ளோம் என்று காட்டக்கூடிய விதத்தில் நாம் பேச வேண்டும். கீழ்வரும் ஏதாவது ஒரு வசனம் இதற்குப் பொருத்தமானது.

' இது ஒரு பயங்கரமான, அந்தரமான ஒன்றாக இருந்திருக்கும்'

'அது உனக்கு பயங்கர ஆத்திரத்தைக் கொடுத்திருக்கும்'

'அந்த நேரத்தில் அந்த ஆசிரியர் மீது உனக்கு பயங்கர வெறுப்பு ஏற்பட்டிருக்கும்'

'இது உனது உணர்வுகளைப் பயங்கரமாகத் தாக்கியிருக்கும்'

'இன்றைக்கு உனக்கு ஏதோ ஒரு கூடாத நாள் போல'

ஒரு குழந்தைக்கு 'நீ அப்படி கருதுவது சரியல்ல' என்று கூறுவதன் மூலம் அதன் ஆழமான உணர்வுகளை இல்லாமலாக்கிவிட முடியாது. அல்லது 'அப்படி நினைப்பதற்கு அங்கே ஒன்றும் இல்லை'

என்று கூறுவதும் அப்படியே தான். ஆழமான மனப்பதிவுகளை விரட்டி இல்லாமல் செய்துவிட முடியாது. அவற்றின் அழுத்தங்கள் மற்றவர்களால் தாம் அனுதாபத்துடன் புரிந்து கொள்ளப்படுகிறோம் என்று தெரியும் போது கொஞ்சம் கொஞ்சமாக முனை மழுங்கிக் குறைந்து போகின்றன.

இது குழந்தைகட்கு மட்டுமல்ல, பெரியோர்களுக்கும் கூடப் பொருத்தமானது. ஒரு சில பெற்றோர்கள் மத்தியில் நடந்த கலந்துரையாடலிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்வரும் பகுதி இதைத் தெளிவாகக் காட்டுகிறது.

தலைவர்: ஒரு காலை நேரம் என்று எடுத்துக் கொள்வோம். அன்றைக்கு எல்லாம் மோசமாக நடக்கின்றன. டெலிபோன் அடிக்கிறது. குழந்தை அழுகிறது, நீங்கள் கவனிக்கு முன்னரே அடுப்பிலிருந்த உணவு கருகி விடுகிறது. உங்களது கணவர் இதைக் கண்டு விட்டுக் கேட்கிறார்: 'கடவுளே நீ எப்ப தான் சாப்பாட்டை கருக்காமல் சமைக்கப் பழகப் போகிறாயோ? 'உங்களது எதிர்வினை என்ன?

திருமதி அ: சாப்பாடட்டை தூக்கி அவரது முகத்தில் வீசி எறிவேன்.

திருமதி ஆ: உன்ரை சாப்பாட்டை நீயே சமைத்துத் தின்னேன்' என்று சொல்லுவேன்.

திருமதி இ: இது என்னைச் சரியாகப் பாதிக்கும். நான் அழுவேன்.

தலைவர்: உங்களது கணவரின் சொற்கள் உங்களிடம் எத்தகைய உணர்வுகளை ஏற்படுத்தியிருக்கும்?

பெற்றோர்கள்: கோபம், வெறுப்பு, மனக்கசப்பு..........

தலைவர்: உங்களால் இன்னொரு தடவை சமைக்க முடியுமா?

திருமதி அ: இல்லை. அன்று முழுவதுமே பாழ் தான்.

தலைவர்: உதாரணமாக, அதே நிலைமை. சாப்பாடு கருகுகிறது. உங்கள் கணவர் நிலைமையை அவதானித்துவிட்டு சொல்கிறார்: 'ஓ........ அன்பே..... இன்றைக்கு உனக்கு நல்லாத் தான் விடிஞ்சிருக்கு........ முதல் குழந்தை, பிறகு டெலிபோன்.... .... இப்ப சாப்பா.......'

திருமதி அ: என்னுடைய கணவன் அப்படிச் சொன்னாலோ..... நான் செத்தே போவேன்.

திருமதி ஆ: ஆ...... எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்.

திருமதி இ: என்னுடைய சந்தோஷத்தில் கட்டிப்பிடித்து ஒரு முத்தம் கொடுத்து விடுவேன்.

தலைவர்: ஏன்.......? குழந்தை இன்னமும் அழுகிறது.... ..... சாப்பாடு கருகிவிட்டது.... அப்படியிருந்துமா?

பெற்றோர்கள்: அது ஒன்றும் பிரச்சினையில்லை.

தலைவர்: அப்ப எது நிலைமையை மாற்றுகிறது?

திருமதி ஆ: அவர் என்னோடு நிற்கிறார். அவர் என்னை விமர்சிக்கவில்லை. எவர் எனக்கு எதிராக இல்லை என்பது சந்தோஷத்தையும், நன்றியுணர்வையும் ஏற்படுத்தும்.

தலைவர்: இப்போது ஒரு மூன்றாவது வகை கணவனைப் பற்றி சொல்லப் போகிறேன். எரிந்து போன சாப்பாட்டை பார்த்து விட்டு அவர் மிகவும் அமைதியாகச் சொல்கிறார். 'பார் அன்பே..... நான் எப்படி சமைப்பது என்று உனக்கு காட்டித் தருகிறேன்.

திருமதி அ: இவன் முதலாமவனை விட மோசமானவன். இவன் எங்களை முட்டாளாக நினைக்கிறான்.

தலைவர்: இப்போது இந்த மூன்று அணுகுமுறைகளும் எப்படி நாம் குழந்தைகளை அணுகுவதில் பயன்படுகிறது என்று கவனிப்போம்.

திருமதி அ: எனக்கு நீங்கள் எங்கே போகிறீர்கள் என்று தெரிகிறது. நான் எப்போதும் எனது மகனுக்கு இப்படிச் சொல்லுவேன். 'இதையெல்லாம் தெரிந்து வைத்திருக்க வேண்டிய வயது உனக்கு வந்து விட்டது! உனக்கு இதைச் செய்யத் தெரிய வேண்டும்' என்று சொல்லுவேன். இது அவனுக்கு கோபத்தை ஊட்டுகிறது. இது வழமையாக நடக்கிறது.

திருமதி ஆ: நான் எப்போதும் மகனுக்கு சொல்லுவேன். 'பொறு மகன், இதை செய்வது என்று நான் சொல்லித் தருகிறேன்.'

திருமதி இ: நான் பெரும்பாலும் விமர்சிக்கப்பட்டுப் பழகி அதுவே எனது இயல்பாகி விட்டது. எனது அம்மா எனக்கு எதிராகச் சொன்ன அதே வார்த்தைகளை நான் எனது பிள்ளைகட்கும் சொல்கிறேன். இதற்காக எனது அம்மாவை நான் வெறுக்கிறேன். நான் ஒரு போதும் எதையும் சரியாகச் செய்ததில்லை. அம்மா தான் என்னைச் செய்ய வைத்தார்.

தலைவர்: இப்போது அதே வேலையை உங்கள் மகளுக்கு செய்கிறீர்கள்.

திருமதி இ: ஆம். ஆனால் எனக்கு இது பிடிக்கவில்லை. நான் அப்படிச் செய்யும் போது என்னையே பிடிக்கவில்லை.
தலைவர்: அதாவது உங்கள் குழந்தைகளுடன் பேச புதிய வழிகளைத் தேடுகிறீர்கள்
.திருமதி இ: ஆம். நிச்சயமாக.
தலைவர்: இந்த எரிந்த சாப்பாட்டுக் கதையிலிருந்து நாம் என்னென்னத்தைக் கற்றுக் கொள்ளலாம் என்று பார்ப்போம். நாம் விரும்புபவர்களது உணர்வுகளை மாற்றுவதில் உதவியது என்ன?
திருமதி ஆ: அதாவது யாராவது உங்களைப் புரிந்து கொள்கிறார்கள் என்பது.

திருமதி அ அதாவது உங்களை எப்படித் திருத்திக் கொள்வது என்று ஆலோசனை கூறாமல் புரிந்து கொள்வது.
இந்த உதாரணம் சொற்களின் பலத்தை உணர்த்துகிறது. சந்தோஷத்தையோ, சச்சரவையோ அவை ஏறபடுத்தக் கூடியன. சக்தி வாய்ந்தவை என்பதை இதன் மூலம் நாம் காணலாம். இந்தக் கதையின் அடிநாதம் என்னவென்றால் எமது எதிர்வினைகள் (சொற்களும், உணர்வுகளும்) ஒரு எதிர்பார்த்த மாற்றத்தை ஏற்படுத்தவும் எமது இல்லதில் அமைதியை உருவாக்கவும் வல்லன என்பதே.

**சம்பவங்களிலிருந்து உறவுக்கு ....**

ஒரு குழந்தை ஒரு சம்பவம் பற்றிச் சொல்லும் போது, அல்லது கேட்கும் போது, அனேகமான சந்தர்ப்பங்களில் அச்சம்பவங்களைவிட, அச்சம்பவங்களின் மூலமாக மறைமுகமாக எதிர்பார்க்கப்படும் உறவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே சிறப்பானதாக இருக்கிறது. இந்த உதாரணத்தைப் பாருங்கள்.

புளோரா தனது சகோதரனை விட தனக்குக் குறைவான பரிசுப் பொருட்களே கிடைக்கின்றன என்று தாயாரிடம் குறைபட்டுக் கொண் டாள். அவளுக்கு வயது ஆறு. தாயார் இந்தக் குற்றச்சாட்டை மறுக்க வில்லை. அவளது சகோதரன் வயது கூடியவன் எனபதால் அதிகளவு பரிசைப் பெறும் தகுதி அவனுக்கு உண்டு என்று குறிப்பிடவும் இல்லை. அது மட்டுமல்ல, இந்தப் பிழையை தான் திருத்தி விடப் போவதாகக் கூறவும் இல்லை. குழந்தைகள் பரிசுப் பொருட்களின் அளவையும்

தொகையையும் விட பெற்றோர்களுடனான தமது உறவின் ஆழம் குறித்தே அதிகம் அக்கறையுள்ளவர்களாக இருப்பார்கள் என்பது அவளுக்குத் தெரியும். அவள் 'உங்களுக்கும் நிறைய பரிசுகள் தேவையா?' என்று கேட்டாள். அதற்கு மேல் எதுவும் பேசாமல் ஃபுளோராவை அணைத்துக் கொண்டாள். மகளோ ஒருவகை ஆச்சரியத்துடனும், மகிழ்ச்சியுடனும் இந்தச் செயலை ஏற்றுக் கொண்டாள். நீண்ட முடிவேயற்ற விவாதங்களுக்கு இட்டுச் சென்றிருக்கக் கூடிய ஒரு உரையாடல் எவ்வளவு இலகுவாக முடிந்து விட்டது?

மீண்டும் எதிர்பாருங்கள்...

## சும்மா இருக்கும் அம்மா?



அம்மா என்ன செய்கிறாவென்று
அன்றொரு பையனை நான் கேட்டேன்
சும்மா வீட்டில் இருக்கிறாவென்று
சுணங்காமல் வந்தது பதில்

காலையில் முதலிலெழுவது யாரென்று
சும்மா நானும் கேட்ட போது
வேறயாரு அம்மாதான்
அவவ முந்த எம்மால் ஏலாது

நான்கு மணிக்கு கோயில் மணியடித்தால்
கண்விழித்து காலைக் கடன் முடித்து
அடுக்களை பெருக்கி மூட்டி
சூடான காப்பி தந்து

காலையுணவு எமக்களித்து
அப்பாவையும் எம்மையும்
அலுவல்களுக்கனுப்பி விட்டு

வீடு வாசல் பெருக்கி தெளித்து
எம்முடைய துணிகள் துவைத்து
குளித்து மீண்டும்
குசினிக்குள் புகுந்தாவென்றால்

அரக்க பறக்க வேலை செய்து
அறுசுவையாய் சமையல் செய்து
அப்பாடாவென்று சாய்ந்தால்
அம்மாவென்று நாம் கத்த
அசரீரியாய் ஒலிக்கும் குரல் கேட்டு
அசதியுடன் எழுந்து
உணவு பரிமாறி - மீண்டும்
எம்மை ரியூசனுக்கு அனுப்பி விட்டு

ஆடு மாடு கோழி மேய்த்து
ஆடையெல்லாம் மடித்து வைத்து
நான்கு மணிக்கெல்லாம்
நறுக்கான ரீயும் தந்து
ராத்திரிக்கு உணவு சமைத்து
அதை பக்குவமாய் பரிமாறி
எம்மை நித்திரைக்கு அனுப்பி விட்டு

பாத்திரங்கள் துலக்கி அடுக்கி
நாளைக்கு ஆயத்தம் செய்து
நித்திரைக்கு போறதுக்கு
பத்து மணியாகுமெண்டு
அம்மா அடிக்கடி சொல்லுறவா

களைத்துப்போன பையனிடம்
மீண்டும் கேட்டேன் நான்
அம்மா என்ன செய்யிறா தம்பி?
அழுத்துக்கொண்ட தம்பி சொன்னான்
சும்மா வீட்டில இருக்கிறாவெண்டு
இப்பத்தானே சொன்னனான்

ரேணுகா இரத்தினம்
வேலணை.

THULIROHAL

## உறுப்புக்களின் உயிர்கள்

இறந்து போன பிறகும் சில உறுப்புக்கள் சிறிது நேரம் உயிருடன் இருக்கும்.
எந்தெந்த உறுப்புக்கள் எவ்வளவு நேரம் உயிருடன் இருக்கும் என்பதை கேட்டால் ஆச்சரியமாக இருக்கும்.
படித்து நீங்களும் ஆச்சரியப்படுங்கள்
எலும்பு - 30 நிமிடம்
கண்கள் - 31 நிமிடம்
மூளை - 10 நிமிடம்
கால் - நான்கு நிமிடம்
தோல் - 05 நிமிடம்
இதயம் - 10 நிமிடம்
காது - 01 மணி நேரம்
தோல்பட்டை - 04 மணி நேரம்

THULIROHAL NO.47,

துசாரிகா விவேகானந்தன்
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

கதை

## பேராசை

ஒரு ஊரில் விஜய், தனுஷ் ஆகிய இருவரும் வாழ்ந்து வந்தார்கள். ஒரு நாள் தமது உறவினர் வீட்டுக்குச் நடந்து சென்றனர். செல்லும் வழியில் ஒரு காட்டை கடக்க நேர்ந்தது. இவர்கள் காட்டு வழியாக சென்று கொண்டிருந்த போது ஒரு முதியவர் அவர்கள் இருவரையும் சந்தித்தார். அந்தப் பெரியவர் அந்த வனத்தினுள் ஒரு பாழடைந்த வீட்டைக் காட்டி அந்த வீட்டுக்குள் போக வேண்டாம் என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

அப்போது அந்த இருவரும் அதற்குள் சென்று பார்ப்போம் எனக் கூறி இருவரும் அந்தப் பாழடைந்த வீட்டிற்குள் போனார்கள். அங்கே சென்றதும் இருவரும் திகைத்து நின்றனர். அந்த வீட்டிற்குள்ளே விலை மதிப்பற்ற இரத்தினங்கள், நகைகளைக் கண்டனர். இருவரும் அந்த நகைகளை வீட்டிற்கு கொண்டு செல்லத் தீர்மானித்தனர். இருவரிடமும் ஒரு பையும் இல்லை. உடனே தாங்கள் அணிந்திருந்த சேட்டைக் கழற்றி இருவரும் ஒவ்வொரு பொதியாகக் கட்டினார்கள். கட்டி முடிந்ததும் பசி அவர்களை வாட்டியது.

அப்போது தனுஷ் காட்டுக்குள் பழங்கள் பறிப்பதற்காக விஜயிடம் சொல்லிவிட்டுச் சென்றான். அவன் பழங்களைப் பறிக்கச் சென்றதும் விஜய்க்கு திடீரென ஒரு யோசனை தோன்றியது. உடனே விஜய் தன் கத்தியை எடுத்து தனக்குப் பின் ஒழித்து வைத்திருந்தான்.

அப்போது தனுஷ் பறித்த பழங்களைக் கொண்டுவந்து விஜயிடம் கொடுத்ததும் விஜய் தனுஷைகத்தியால் குத்தினான். தனுஷ் உடனே இறந்தான். விஜய்க்கு பசி வயிற்றைக் கிள்ளியது. அவன் தனுஷ் கொண்டு வந்த பழங்களில் நல்ல பழங்களுடன் நஞ்சுப்பழங்களையும் உண்டான். உடனே விஜயும் இறந்தான். இருவரும் பேராசைப்பட்டு தமது உயிருக்கு உலை வைத்தார்கள்.

சி சுஜீபன்
க பிரதீபன்
*V* தனு
வளர்ஒளி சிறுவர் கழகம்

## கவிதை

அம்மா உன் மடியில் இருந்தபோது
சோகங்கள் தெரியவில்லை - உன்
அருகில் இருந்தவரை உன் அருமை
புரியவில்லை................
நான் ஆசையால் கேட்டவற்றை
அடுக்கடுக்காய் வாங்கித் தருவாய்
வசதியாய் சாய உன்மடி தாங்கிடுவாய்
இன்று உன் கண்ணுக்கு
எட்டாத துாரத்தில் நானும்
என் கண்களின் ஒளியாய் நீயும்
உண்டேன் என்று தெரியாமல் நீயும்
சுகமா என்று தெரியாமல் நானும்
இத்துயரம் இன்னும் எத்தனை நாட்களுக்கு
என் ஆருயிர் அம்மா

யோ மேரிசாளி

## மரத்திலே பூக்காத பூ

| | | |
|---|---|---|
| ❖சிறுவர் செய்யும் பூ | - | குறும்பு |
| ❖மனிதன் பேண வேண்டிய பூ | - | மதிப்பு |
| ❖புத்திசாலியான பூ | - | எறும்பு |
| ❖இதயத்தில் வரும் பூ | - | துடிப்பு |
| ❖அடிக்க உதவும் பூ | - | கம்பு |
| ❖வயலில் உள்ள பூ | - | வரம்பு |
| ❖இருட்டான பூ | - | கறுப்பு |
| ❖எல்லோருக்கும் தேவையான பூ | - | அன்பு |
| ❖மனிதன் புகழும் பூ | - | சிறப்பு |
| ❖மனிதனுக்கு இருக்க வேண்டிய பூ | - | பண்பு |

பீ பியூட்சன்
தேன்தமிழ் சிறுவர் கழகம்

## பொறுப்பாக நடந்து கொள்ளுங்கள்

பெற்றோர்களின் செயல்களுக்கு காட்டப்படும் சிவப்புக் கொடி எதிர்ப்பு இயக்கம்.
உழைக்காமல் பணம் சேர்ப்பது
உழைப்பவரைக் கொள்ளையிடுவது.
இருப்பதை பகிராமலிருப்பது
இல்லாரை மதிக்க மறுப்பது.
உரிமையை கேட்க மறுப்பது
உயிருக்காக பயந்து வாழ்வது.
உயிர் வாழ்வது ஏனென்று கேட்பது
காசைக் கடவுளென்று வாழ்வது.
ஆசைக்கு அடிமையாகி அழிவது
சுயநலம் கொண்டோராய் மகிழ்வது.
சுற்றியுள்ளோரை நிதம் ஏமாற்றுவது
வாருங்கள் சிவப்புக் கொடிகளுடன்
பொறுப்புடன் வாழப் பழகுவோம்.
நாம் வாழ்ந்தால்
நம் மண்ணகமே பொறுப்புள்ளதாகிவிடும்.
ஏனென்றால் பொறுப்புடன் வாழ்வோரால் மட்டுமே
பொறுப்புள்ள சமுதாயத்தை உருவாக்க முடியும்.

பீ. பியூட்சன்
தேன்தமிழ் சிறுவர் கழகம்

## சுட்டிப்பயலே

விரல்களின் அணைப்பில் நேற்றிரவு..........
நோர்வேயின் சூரிய அஸ்தமனத்தையல்லவா
காட்டினாய்.
கணனியின் ஒவ்வொரு பிரசவமும் - உன்
உத்தரவுக்காக அல்லவா............

காத்துக் கிடக்கிறது யார் நீ.
கிளியோ பற்றாவின் வாழ்வையும்.............
பிக்காஷோவின் ஓவியங்களையும்
தாஜ்மஹாலின் அழகையும் - என்
கண்களிலே கிளிக் பண்ணுகிறாயே.
எனினும் நீயோ உன்னை.............
அறிந்து கொண்டவர்களுக்கே
புதிய அத்தியாயங்களை கற்பித்துக்
கொண்டிருக்கிறாய்.
பெண்மையில் மென்மையை உன்னிடமல்லவா
கண்டு கொண்டேன் உன்னிடம் நான்
கற்க வேண்டியது நிறைய உள்ளது.
நீ கரங்களில் தவழும் போது நான்
உலகின் உச்சங்களை எல்லாம் கண்டு கொள்கிறேன்.
பில்கேட்ஸைஉலகறிய
வைத்த நீ நாளை  என்னையும் உலகறிய
வைப்பாய் என்ற நம்பிக்கை உண்டு.

பீ பியூட்சன்
தேன்தமிழ் சிறுவர் கழகம்

## யாழ் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு உடனான நேர்காணல்

"சிறுவர் குரல;" சஞ்சிகைக்காக யாழ் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு இணைப்பாளர் திரு.ஸ்ரீபன் கந்தராஜ் உடனான நேர்காணலின் தொகுப்பு

**வணக்கம் யாழ் மாவட்ட சிறுவர்குழு எவ்வாறு என்ன காரணத்திற்காக தோற்றம் பெற்றது?**
வணக்கம். பொதுவாக சிறுவர் பாதுகாப்புக்குழுவின் வரலாற்றை நோக்கினால் எல்லா நாடுகளும் சிறுவர் உரிமை சமவாயத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற ஐ.நா.வின் திட்டத்தின் கீழ் 1991" ஆண்டு கைச்சாத்திடப்பட்டது. இதனடிப்படையில் இலங்கையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதை உறுதிப்படுத்தும் வகையில் 1998 இல் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நிறுவப்பட்டது. இச்சபை 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்வதில் சட்டரீதியான அங்கீகாரம் பெற்றதாக காணப்பட்டது.

இதன் மூலம் சட்டரீதியாக மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு நியமிக்கப்பட்டது.

**தற்சமயம் யாழ் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவின் அமைப்புப்பற்றி சிறிது விரிவான விளக்கம் கூற முடியுமா?**

இக்குழு இன்று யாழ்ப்பாணம் பிரதான வைத்தியசாலையில் அறையெண் 30 இல் இயங்கிக்கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் சிறுவர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக தொடர்பு கொள்ளும் சமயங்களில் எவ்விதமான சிக்கலுமின்றி இலகுவாக தொடர்பு கொள்ள முடியுமென்பதாகும்.

இக்குழுவின் ஆரம்ப அங்கத்தவர்களாக 22 பேர் தெரிவு செய்யப்படுகின்றனர். சகல துறையிலும் இருக்கும் பாண்டித்தியமான உத்தியோகத்தர்களும் இந்த 22 பேரில் உள்ளடங்குகின்றனர்.

- ❖ அரச அதிபர் (தலைவர்)
- ❖ மதத்தலைவர்கள்
- ❖ அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள்
- ❖ மகப்பேற்று நிருபர்
- ❖ குழந்தை மருத்துவ அதிகாரி
- ❖ சட்ட வைத்திய அதிகாரி
- ❖ மேலதிக கல்விப் பணிப்பாளர்
- ❖ ஊழியர் பிரதிநிதியாணையாளர்
- ❖ சிறுவர் பாதுகாப்புச் சபை பிரதிநிதி
- ❖ சட்ட ஆலோசகர்
- ❖ உளமருத்துவ அதிகாரி

போன்றோர் குறிப்பிடத்தக்கோர்.

**தற்சமயம் சிறுவர் பாதுகாப்புக்குழு என்ன செயற்பாடுகளை செய்கிறது?**

ஏம் முக்கியமான செயற்பாடாக கண்காணித்தல், அறிக்கையிடல் அதாவது சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விடயங்களை கண்காணித்து அறிக்கையிடலை குறிப்பிடலாம். தற்போது நாம் பாடசாலை மட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு, பிரதேச ரீதியாக சிறுவர் பாதுகாப்பு, கிராமிய மட்டத்திலான அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஊடான சிறுவர் பாதுகாப்புக்குழு ஆகியவற்றினை உருவாக்கல், சிறுவர் இல்லத்திலுள்ள பிள்ளைகளை பெற்றோருடன் மீள இணைத்தல் அதாவது பாதுகாப்பான சரியான இடமென்று அறியப்படும் பட்சத்திலேயே மீள இணைக்கின்றோம். இது தவிர விழிப்புணர்வு செயற்திட்டங்களையும் மேற்கொள்கிறோம்.

**தற்சமயம் சிறுவர்களுக்கு என்ன வகையான உதவிகளை செய்கிறீர்கள்?**

சிறுவர் தொடர்பான பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் தவிர சிறுவர்களுக்கு கல்வி உபகரணங்கள், சத்துணவு வழங்கல் போன்ற செயற்படுத்துகிறோம். மாதந்தம் முப்பது சிறுவர்களுக்கு இவ்வுதவிகளை செய்கின்றோம். யாழ் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து 2 சிறுவர்கள் என்ற அடிப்படையில் தெரிவு செய்கிறோம். இது தொடர்பாக யாழ்ப்பாணம், மல்லாகம், சாவகச்சேரி ஆகிய பிரதேசங்களில் ஒவ்வொரு சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் செயற்படுகின்றனர். இவர்கள் தவிர 14 சிறுவர் மேம்பாட்டாளர்களும், 4 முன்பிள்ளைப் பருவ அலுவலர்களும் செயற்படுகின்றனர்.

**நீங்கள் உங்கள் செயற்பாடுகளுக்கான நிதியை எங்கிருந்தெல்லாம் பெற்றுக்கொள்கின்றீர்கள்?**

முக்கியமாக *Unicef, Save the children, Fit* போன்ற நிறுவனங்கள் நிதியுதவி செய்கின்றனர். இவை தவிர நலன் விரும்பிகளும் ஒரளவு உதவி செய்கின்றனர்.

**உங்களுக்கு கிடைக்கும் நிதியுதவிகள் உங்கள் செயற்பாடுகளுக்கு போதுமானதாக உள்ளதா?**

எமது செயற்பாடுகளுக்கு கிடைக்கும் நிதி பற்றாக்குறையாகவே உள்ளது

**சிறுவர்களின் பிரச்சினைகள் எல்லாவற்றையும் வேறுபாடின்றி நோக்கி தீர்வு காண்கிறார்களா?**

ஆம். சிறுவர்கள் தொடர்பான எல்லாப் பிரச்சினைகளையுமே நாம் எந்தவித வேறுபாடுமின்றியே நோக்குகின்றோம். ஆயினும் எமது செயற்பாடு, பிரச்சினைகளை இனங்கண்டு சட்டத்தின் பார்வையின் கீழ் கொண்டு செல்வது ஆகும். அதற்கு மேலாக அனைத்து நடவடிக்கைகளும் சட்டத்தின் மூலமே எடுக்கப்படுகின்றன. எம் செயற்பாடு எல்லோரையும் உள்ளடக்கிய செயற்பாடு. அதாவது பிள்ளைக்கு எது பாதகமாகவுள்ளதோ அதைத் தடுத்து நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தலாகும். அவ்வகையில் நாம் சரியான உண்மையான தகவலை நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்.

**சிறுவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு உங்களிடம் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும்?**

உடனடியாக தொடர்பாயின் 021-2225657 என்ற தொலைபேசி இலக்கத்தினூடு எம்முடன் தொடர்பு கொள்ளலாம். இது தவிர உடனடியாக பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிறுவர் நன்னடத்தை அதிகாரியிடம் முறையிடலாம்.
நாம் சிறுவர் துஷ்பிரயோகங்களை பாலியல் புறக்கணிப்பு, சரீர தண்டனை, பாதுகாப்பின்மை என்பவற்றின் அடிப்படையில் நோக்குகின்றோம். எனவே இவை தொடர்பான அணுகுமுறைக்கு

கிராமிய மட்டக்குழு மற்றும் *A.G.A* அலுவலர் போன்றோரை அணுகலாம் இயலாத பட்சத்தில் சிறுவர் பாதுகாப்புக்குழுவிடம் அணுகலாம்.

**சிறுவர்களின் எதிர்காலத்தை பாதிக்கும் வகையில் அவர்கள் தொடர்பான பிரச்சினைகளை வெளியுலகின் பார்வைக்கு கொண்டு வருவீர்களா?**

நிச்சயமாக இல்லை. நாம் வெளியிடும் தகவல்கள் எந்த வகையிலும் சிறுவர்களின் எதிர்காலத்தை பாதிக்காத வகையில் அமைய வேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறோம். பத்திரிகைகளுக்கு செய்திகளை வழங்கும் போது பெயர், இடம் வெளியிடக் கூடாது என்பதை வலியுறுத்துவோம். வருடாவருடம் இவ்வறிவித்தல் தொடர்பான கடிதமொன்றை எல்லாப்பத்திரிகைகளுக்கும் அனுப்புவோம்.

**சிறுவர் தொடர்பான குற்றவாளிகளை தண்டனைகளால் மட்டும் திருத்த முடியுமென நினைக்கிறீர்களா?**

வின், சாந்திகம் போன்ற நிறுவனங்களினூடாக குற்றவாளிகளை உளரீதியாக திருத்த முற்படலாம். ஆயினும் அவர்களை உளரீதியாக வழிநடத்தும் அளவிற்கு தகுதியாகவும், வசதியாகவும் வழி நடத்துவேர் கிடைக்கவில்லை. ஆயினும் நாம் இதுவரை எந்தவொரு குற்றவாளியையும் தண்டனைக்கு உட்படுத்தவில்லை.

**சமூகத்தில் உங்கள் நிறுவனத்திற்கு போதியளவு ஆதரவு கிடைக்கின்றதா?**

சமூகம் எம்மை இரண்டு வகையாக நோக்குகின்றது. சில நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளும் போது சமூகம் தாம் அசௌகரியம் அடைவதாக உணர்கிறது. ஆயினும் எம் நடவடிக்கைகளின் இறுதி முடிவில் சமூகம் திருப்தியடைவதை உணர முடியும்.

**இன்றைய சிறுவர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

இன்றைய சிறுவர்களின் பெரும்பான்மையான பிரச்சினைகள் அவர்களது குடும்பத்தினுள்ளே ஏற்படுகின்றது. எனவே தம் குடும்பத்தை வலுப்படுத்துவதற்கான சிந்தனைகளை வளர்ப்பதன் மூலம் தம் பிரச்சினைகளை தீர்க்க முடியும். வெளி நிறுவனங்கள்தான் தீர்க்க வேண்டும் என்றில்லை.

பெற்றோர்களுக்கும் ஆசியர்களுக்கும் என்ன கூற விரும்புகிறீர்கள்?

சிறுவர்களுக்கு எதனையுமே திணிக்க முற்படக்கூடாது. எல்லா வகையிலும் நல்ல ஆலோசகராக திகழ வேண்டும்.

நேர்காணல்: செல்வி கோபினி
செல்வி. மாளவிகா


## ஏமாந்து போன வேலைக்காரர்கள்

கிழவி ஒருத்தியின் வீட்டில் இரண்டு வேலைக்காரர்கள் இருந்தனர். அதிகாலையில் சேவல் கூவுகையில் கிழவி இருவரையும் எழுப்பி வேலை வாங்கத் துவங்கிவிடுவாள். இதனால் ஆத்திரடைந்த இருவரும் ஒருநாள் சேவலைக் கொன்று விட்டனர். சேவல்தான் இறந்து விட்டதே கிழவி என்ன செய்யப்போகிறாள்? நமக்குத் தொல்லை நீங்கியது என்று சந்தோசத்துடன் தூங்கச் சென்றனர். ஆனால் கதை மாறி விட்டது. சேவல் சத்தம் இல்லாததால் இப்போதெல்லாம் இன்னும் சீக்கிரமே அவர்களை எழுப்பி வேலை செய்யக் கூறுகிறாள் கிழவி. "பேராசை பெரும் நஸ்டம் தரும்".

ஆக்கம்: போ சங்கீதா

## காலைக் காட்சி

செக்கச் சிவந்த செங்கதிரோன்
கிழக்கில் வந்து ஒளியைப் பரப்பி
தங்கத் தகடு போன்று
உலகையே மிளிர வைக்கும் காட்சியது.
வானம் எங்கும் முகிற் கூட்டங்கள்
பாடியாடிப் பவனி வரும்
இனிய காலைப் பொழுதினிலே
ஒன்று கூடி உலா வரும்.
சூரியனின் கதிர்கள் பட்டு
வானம் எங்கும் ஒளிமயம்
சூரியனின் தென்னங்கீற்றால்
உலகமெங்கும் ஆனந்தம்.
காலை வேளையிலே
ஒற்றுமையாய் ஒன்று கூடி
இமை தேடச் செல்லும
பறவைகளைப் பாரீர்!



ஆக்கம்: பி காமினி
தேன்தமிழ் சிறுவர் கழகம்

## அன்பு

அன்பு பொறுமையுள்ளது. நன்மை செய்யும் பொறாமைப் படாது. தற்புகழ்ச்சி கொள்ளாது. இறுமாப்பு அடையாது. அன்பு இழிவானதை செய்யாது. தன்னலம் நாடாது. எரிச்சலுக்கு இடம் கொடாது. தீங்கு நினையாது. அன்பு தீவினையில் மகிழ்வுறாது. மாறாக உண்மையில் அது மகிழும். அன்பு அனைத்தையும் எதிர் நோக்கியிருக்கும். அனைத்திலும் மன உறுதியாய் இருக்கும். இறைவாக்கு உரைக்கும். கொடை ஒழிந்து போகும். அறிவும் அழிந்து போகும். ஆனால் அன்பு ஒரு போதும் அழியாது.

தே சுவேந்திரன்
தேன்தமிழ் சிறுவர் கழகம்

## சிரிப்பின் வகைகள்

| | | |
|---|---|---|
| ஓயாமல் சிரிப்பவன் | :- | பைத்தியக்காரன் |
| இருக்கும் இடமெல்லாம் சிரிப்பவன் | :- | கோமாளி |
| காணாமல் சிரிப்பவன் | :- | கஞ்சன் |
| கற்பனையில் சிரிப்பவன் | :- | கவிஞன் |
| நிலை மறந்து சிரிப்பவன் | :- | காதலன் |
| கொடுக்கும் போது சிரிப்பவன் | :- | சூழ்ச்சிக்காரன் |
| மகிமையில சிரிப்பவன் | :- | மன்னன் |
| அருளிரந்து சிரிப்பவன் | :- | ஆண்டி |
| நினைவோடு சிரிப்பவன் | :- | அறிஞன் |
| துன்பத்தில் சிரிப்பவன் | | மனிதன் |

ஆக்கம்: துவாரகாயினி
தாரகை சிறுவர் கழகம்

## பாடி ஆடுவோம்

பாட்டுப் பாடி ஆடுவோம்
பாய்ந்து குதித்து ஓடுவோம்
பாசத்தோடு கூடுவோம்
பள்ளிச் சிறுவர்களோடு
அம்மா தந்த பாலை
ஆசையோடு குடிப்போம்
அப்பா சொல்லும் கதைகள்
அருகில் சென்று கேட்போம்
வெள்ளைக் கன்று போலவே
வேகமாக ஓடுவோம்
புள்ளி மயிலைப் போலவே
துள்ளிக் குதித்தாடுவோம்
பாட்டுப் பாடி ஆடுவோம்.............
அன்னை சொல்லைக் கேட்டு
ஆர்வமாகப் படிப்போம்
கண்ணைப் போலக் காக்கும்
கடவுள் பாதம் பணிவோம்
தத்தித் தத்திப் பாயும்
தவளை போலத் தாவுவோம்
கொத்திக் கொத்தி உண்ணும்
குயிலைப் போல கூவுவோம்

ஆக்கம்: இ ஸ்ரீரஞ்சினி
தேன்தமிழ் சிறுவர் கழகம்

இலங்கையின் தலைநகரம் - ஸ்ரீ ஜெயவர்த்தனபுரி
இலங்கையின் தனி மனித வருமானம் - 27,000 ஆயிரம்
இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் - திரு ஆனந்த சமரக்கோன்
இலங்கையின் தேசிய மரம் - நாகமரம்
இலங்கையின் தேசிய பறவை - காட்டுக் கோழி
இலங்கையின் தேசிய விளையாட்டு - கரப்பந்தாட்டம்

## சமூகம்

நாடு வளம் பெற்றால்
ஊரும் வளருமே
வீடும் சிறக்குமே
வந்து கூடும் செல்வமே
பாடசாலை, கோயில் பொது உடமையல்லவா
பாதுகாத்துப் போணல் எங்கள் கடமையல்லவா
பாதையெங்கும் தேங்கி நிற்க்கும் மழை வெள்ளமே
பார்த்துச் செப்பம் செய்ய வேண்டும் மேடு பள்ளமே
சுற்றுப்புறச் சூழல் தன்னைப் பேணிக் காப்போமே
கற்ற சுகவாழ்வு தன்னைக் கடைப்பிடிப்போமே
தூய காற்றும், உணவும், நீரும் பெற்று வாழுவோம்
தொற்று நோயைத் தடுத்து நலம் பெற்று வாழுவோம்
சமூகமாக வாழ்வதற்கு முக்கியமாக
சமூகத்துடன் இணைய வேண்டும் ஐக்கியமாக
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற முதுமொழி
தொன்று தொட்டு நிலவி வரும் அரிய நல்வழி

ஆக்கம்: இ ஸ்ரீரஞ்சினி
தேன்தமிழ் சிறுவர் கழகம்

## வாழ்க்கை

| | | |
|---|---|---|
| வாழ்க்கை ஒரு சவால் | - | அதனை சந்தியுங்கள் |
| வாழ்க்கை ஒரு பரிசு | - | அதனை ஏற்றுக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு சாகசப் பயணம் | - | அதனை மேற்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு சோகம் | - | அதனைக் கடந்து வருங்கள் |
| வாழ்க்கை ஒரு துயரம் | - | அதனை தாங்கிக் கொள்ளுங்கள் |

வாழ்க்கை ஒரு கடமை - அதனை நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஒரு விளையாட்டு - அதனை விளையாடுங்கள்
வாழ்க்கை ஒரு வினோதம் - அதனைக் கண்டறியுங்கள்
வாழ்க்கை ஒரு பாடல் - அதனை பாடுங்கள்
வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் - அதனைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு பயணம் - அதனை முடித்து விடுங்கள்
வாழ்க்கை ஒரு உறுதி மொழி - அதனை நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஒரு காதல் - அதனை அனுபவியுங்கள்
வாழ்க்கை ஒரு அழகு - அதனை ஆதரியுங்கள்
வாழ்க்கை ஒரு உணர்வு - அதனை உணர்ந்து கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு போராட்டம் - அதனை எதிர் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு குழப்பம் - அதனை விடை காணுங்கள
வாழ்க்கை ஒரு இலக்கு - அதனை எட்டிப் பிடியுங்கள்

ஆக்கம்: அ றொ அனோஜன்
நேன்தமிழ் சிறுவர் கழகம்

- வெற்றியும், தோல்வியும் முயற்சியின் அறுவடை
- ஆண்டிக்கும் அரசனுக்கும் எல்லையே இல்லை
- பிறப்பின் முடிவு இறப்பு இறப்பின் முடிவு பிறப்பு

# தமிழ் மொழி



அன்னை மடியில் குழந்தையாய் நான் அறிந்து கற்க முதல் மொழி தமிழ் மொழி. தமிழ் மொழி எந்தன் தாய் மொழி. என் தாயினும் மேலாகத் தமிழ் மொழியை நான் நேசிக்கின்றேன். தமிழ் மொழி உலகெங்கும் பரவியுள்ளது. காலை வெள்ளத்தை கடந்து நிற்கும் மூத்த மொழியாக தமிழ் மொழி விலங்குகின்றது. தமிழ் மொழியின் உயர்ந்த இலக்கியங்களும் சிறந்த பக்திப் பாடல்களும் உள்ளன.

என்றும் உள்ள மொழியாக இங்கும் தமிழ் மொழிக்கு நிகரான வேறு மொழிகள் இல்லை எனலாம். இதனால்த் தான் மகாகவி பாரதியாரும் யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி வேறுதில்லை எனப் பாடினார்.

தமிழ் மொழிக்கு அமுதம் என்று பேர் என்றார் புரட்சிக் கவிஞர் பாரதி தாசன். தமிழ் மொழியை தாய் மொழியாக கொண்ட நாம் அதனை போற்றி வளர்த்திட என்றும் உழைப்போம்.

ம அஜித்

# ஆத்திரம் அறிவைக் கெடுக்கும்

ஓர் அரசன் வேட்டையாடக் காட்டுக்குப் போனான். ஓர் முயலைப் பிடிக்க வேண்டும் என்பதற்காகத் தன்னுடன் ஒரு வல்லூறையும் உடன் கையில் கொண்டு சென்றான்.

காட்டை அடைந்ததும் ஒரு முயல் ஓடுவதைக் கண்டு தன் கையிலுள்ள வல்லூறை அவிழ்த்துப் பறக்க விட்டுக் குதிரையில் பின் தொடர்ந்தான். வல்லூறு முயலைப் பிடித்து விட்டது. முயலை எடுத்துக் கொண்டான் மன்னன். முயலுக்காக அலைந்த அலைச்சலால் மன்னனுக்கு தாகம் எடுத்தது. ஒரு குன்றின் சரிவினை அடைந்தான்.

அங்கு ஒழுகியவாறே விழுந்து கொண்டிருந்த நீரை ஒரு கிண்ணத்தை வைத்து ஒரு கையால் பிடித்தான். சிறிது நேரத்தில்

போனபோது அடுத்த கையில் இருந்த வல்லூறு தன் சிறகுகளால் அக்கிண்ணத்தைக் கவிழ்த்து விட்டது.

மன்னன் மறுபடியும் கிண்ணத்தில் நீர் பிடித்துக் குடிக்க முயன்றான். அம்முறையும் வல்லூறு கிண்ணத்தைக் கவிழ்த்து விட்டது. மறுபடியும் இதே செயல் நடந்தது. மன்னனுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. உடனே வல்லூறைத் தாக்கி அடித்துக் கொன்று விட்டான். பிரிந்து சென்றிருந்த மன்னனின் ஆட்கள் வந்தனர். அவருள் ஒருவன் அக்கிண்ணத்துடன் நீருக்காகக் குன்றின் மேல் ஓடினான். சென்றவன் விரைந்து திரும்பி வந்து ஒரு செய்தியைச் சொன்னான்.

"அரசே இத்தண்ணீரைப் பருகினால் மாண்டு விடுவீர்கள். இந்த ஊற்றில் ஒரு பாம்பு தங்கி விஷத்தைக் கக்கியுள்ளது." என்றான்.

செய்தி கேட்ட மன்னன் மனம் கலங்கினான். வல்லூறு தனக்குச் செய்த பேருதவியை நினைத்துப் பார்த்தான். அந்தோ வல்லூறு என் உயிரைக் காத்ததே! அதைப் புரிந்து கொள்ளாமல் அதைக் கொன்று விட்டேனே! என்று சொல்லி அழுது புலம்பினான். தான் ஆராயாது செய்ததை எண்ணிக் காலமெல்லாம் வருந்தினான். எந்தச் செயலிலும் ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டு முடிவெடுத்துவிடக் கூடாது. எதனையும் தீரயோசித்துச் செய்ய வேண்டும். அதுவே சிறந்தது.

ஆக்கம்: மகுள்சன்
தேன்தமிழ் சிறுவர் கழகம்

1.மனித உடலில் காணப்படும் எலும்புகள் - 206 எலும்புகள்
2.ஒரு கலத்தில் [illegible] - அமீபா
3.நவீன விண்வெளி யுகத்தின் தந்தை - சியோல்கோவ்ஸ்கி
4.கணனியின் தந்தையென அழைக்கப்படுபவர் - சாள்ஸ் பபேஜ்
5.கிரிக்கெட் தாயகம் - இங்கிலாந்து

அம்மா தந்த அன்பு பார்
அப்பா தந்த அறிவு பார்
பாட்டி தந்த கதைகள் பார்
மாமா தந்த வீரம் பார்
அத்தை தந்த மடியைப் பார்
ஆசான் தந்த கல்வி பார்
நாளை உலகின் தலைவர் பார்

ஆக்கம்: பா ஜனுஷியா
தாரகை சிறுவர் கழகம்

கவிதை

## நான் செல்லப் பிள்ளை

அம்மா மடியில் இருந்து நான்
ஆசைக் கதைகள் பேசுவேன்
அப்பா முதுகில் ஏறி நான்
ஆனை ஓட்டிக் காட்டுவேன்
பாட்டி மடியில் கிடந்து நான்
பாட்டும் கதையும் கூறுவேன்
தாத்தா தோளில் ஏறி நான்
தாளக் காவடி ஆடுவேன்
மாமா நெஞ்சில் ஏறி நான்
குஸ்தி போட்டுக் காட்டுவேன்
அத்தை மடியில் மெத்தை போல்
படுத்தே நானும் தூங்குவேன்


ஆக்கம்: பா ஜனுஷியா
தாரகை சிறுவர் கழகம்

- அதிகளவில் திரைப்படம் பார்ப்பவர்கள் - ரஷ்யர்கள்
- [illegible]இல் முதன்முதலில் வாகனத்தைக் கண்டு பிடித்தவர் [illegible]
- 1945 இல் இலத்திரனியல் கணனியைக் கண்டு பிடித்தவர் - வில்லியம் சொக்லி

பூக்களாம் பூக்களாம்
மஞ்சள், சிவப்பு, வெள்ளையுமாம்
வர்ண வர்ணப் பூக்களாம்
பாட்டாம் பூச்சி வண்டுகள்
தேன் அருந்தும் பூக்களாம்
மானிடத்தின் வாழ்க்கையில்
பங்கு கொள்ளும் பூக்களாம்
பூக்களாம் பூக்களாம்
பூக்களாம் பூக்களாம்

ஆக்கம்: பா ஜனுஷியா
தாரகை சிறுவர் கழகம்

## சமாதானத்திற்காய்........



மனதினில் அமைதியின்றி
இறைவனில் பக்தியின்றி
உணவினில் நாட்டமின்றி
உறவுக்காய் ஏங்கினோம்.
தூக்கமும் சீராய் இன்றி
இன்பங்கள் சிறிதும் இன்றி
துன்பங்கள் தீர்க்கமின்றி
மகிழ்வுக்காய் ஏங்கினோம்.
கையிலே பணமும் இன்றி
சொந்த வயலும் இன்றி
சொத்துக்காய் ஏங்கினோம்.
அன்னையும் கூட இன்றி
ஆசை மகன் அன்புமின்றி
சொத்தென எதுவுமின்றி
பிறந்ததில் பயனுமின்றி
வாழ்க்கையில் பிடிப்புமின்றி
நிரந்தர தீர்வுமின்றி

விடிவுக்காய் ஏங்கினோம்.
இறைவனே வேண்டும் வேண்டும்



சிறப்புடன் பேச்சு வார்த்தை
சாதகமாய் நடக்க வேண்டும்
நிரந்தர சமாதானம் வேண்டும்
நித்தமும் நாம் மகிழ வேண்டும்
புரிந்துணர்வு உடன்படிக்கையில்
சமாதானம் மலர வேண்டும்.

பாலதாஸ் அன்ரனி அமலதாஸ்
மொட்டுக்கள் சிறுவர் கழகம்

## இயற்கை அன்னை அழகு

வானில் பஞ்சாய் மேகங்கள்
வளைந்து நெளிந்து போகுது பார்
கானில் உலவும் குயில் கூட
கனிவாய்க் கூவிச் செல்லுது பார்
காவில் மலரும் மலர்களெல்லாம்
காந்தம் வீசித் திகழுது பார்
ஆவின் கன்று குதித்தோடி
அங்கும் இங்கும் வருகுது பார்
தரையில் நிமிர்ந்த குன்றுகளில்
அருவிகள் நெளிந்து பாயுது பார்
நிரையாய் வளர்ந்த தேயிலைகள்
கம்களத் தோற்றம் காட்டுது பார்
இயற்கை அன்னை இங்கெங்கும்
இணைத்துத் தந்த அழகைப் பார்
செயற்கை எது வரினும்
இயற்கையை வெல்ல எதுவுமுண்டோ?

ஆக்கம்: அ மேரிறொசானி
மொட்டுக்கள் சிறுவர் கழகம்

## இலட்சியம்

என்னில் வேண்டும் இலட்சியம்
நம்மில் வேண்டும் இலட்சியம்
எம் வாழ்வில் வேண்டும் இலட்சியம்
இது நம் இலட்சியம்
இதுவே நம் வாழ்வில் இலட்சியம்

ஆக்கம்: மு சுதர்சினி
ஒளிச்சுடர் சிறுவர் கழகம்

## குயில் பாடல்

குயிலே குயிலே கூவாயோ
காலை மலர்ந்ததெனக் கூவாயோ
கூ கூ எனக் கூவும் - குரல்
கேட்டு காலை விடிந்ததென
துயில் கொள்ளும் சின்னஞ் சிறிய மாணவர் - நாம்
துள்ளியெழுந்தே சுறு சுறுப்பாக
காலைக் கடனை முடித்ததுமே
நீராடி சுத்தம் சுகாதாரமாக நாம்
வாழ பள்ளிப் பாடம் படித்திடுவோம்
அம்மா சொல்லும் வார்த்தைகளை
மனதில்க் கொண்டு வீட்டு வேலைகளையும் செய்து
அம்மாவின் கரங்களைப் பலப்படுத்துவோம்
அம்மா தந்த தேனீர் அருந்த அருந்த தித்திக்குமே
காலை உணவு ருசிக்குமே
விரைவாய் எழுந்து ஆடைகளை
அணிந்து அம்மா அப்பாவை வணங்கி
விரைவாய் பாடசாலை செல்வோமே
அங்கே குருவின் சொல் கேட்டு
நல்ல பாடம் கற்போமே
நல்ல பாடம் கற்றுமே

நல்ல பட்டம் பெறுவோமே
நல்ல பட்டம் பெற்றுமே
எங்கள் தாய் நாட்டுக்கு பெருமை சேர்ப்போமே

ஆக்கம்: பா தேனுஜா
தாரகை சிறுவர் கழகம்

## கவிதை

வினை வினைக்காதே
சிறுவர் எங்கள் மனதிலே
வினை விதைக்காதே
விதைத்துப் போட்டு
எங்கள் வாழ்வை சீரளிக்காதே
வளர்ந்து நாங்கள் பக்குவமாய்
படித்துப் பட்டம் பெறும் வரைக்கும்
பண்புகளோடு பெரியோரே
அன்பாய் எம்மைப் பேணுங்கள்

ஆக்கம்: வி பரிவழகன்
தாரகை சிறுவர் கழகம்

## கல்வி

தினம் தினம் அல்ல
கணப் பொழுது கற்றாலும்
காலத்தால் அழியாதது கல்வி.
கவிஞர் போற்றும் கல்வி
கரை தாண்ட முடியாத கடலது
புல்லிலே புனைந்தாலும்
கல்வி சொல்லிலே வடித்தாலும்
கல்லிலே செதுக்கினாலும்
காலத்தால் அழியாதது கல்வி.

ஆக்கம்: பி கபில்ராஜ்
தாரகை சிறுவர் கழகம்

## நட்பு

நட்பு என்னும் வீணையில்
நாமெல்லாம் தந்தி போல
மனங்கள் என்னும் மலர்களுக்கு
நிறங்கள் என்பது நட்புத்தான்
ஆண்டவன் நட்போ பகைமை அளிக்கும்
ஆறுதல் தந்து அவனி காக்கும்

ஆக்கம்: பி கபில்ராஜ்
தாரகை சிறுவர் கழகம்

## இலங்கை ஓர் அழகான தீவு

இலங்கை ஓர் அழகான தீவு
இலங்கை பல மாகாணங்களினாலும்
மாகாணங்களில் பல மாவட்டங்களினாலும்
மாவட்டங்களில் பல பிரதேசங்களினாலும்
பிரதேசங்களில் பல பிரதேச சபைகளினாலும்
பல மொழி பேசும் மக்களின் இறைமைக்காக
கட்டமைக்கப்பட்டு ஒவ்வொரு மொழி
பேசும் மக்களின் வாழ்வுக்கு ஒவ்வொரு
மாகாணங்களும் அமையப் பெற்றுள்ளன
அந்த வகையில் நான் வடமாகாணத்தில்
யாழ்ப்பாண தீப கற்பத்தில் பிறந்தவள் (சேர்ந்தவள்)
என்பதில் பெருமையடைகிறேன்
எனது மொழி தமிழ்
எனது மதம் இந்து
இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளது
இலங்கையின் அயல் நாடு இந்தியா தீபகற்பம் அமைந்துள்ளது
இலங்கையின் பரப்பளவு 65,525 சதுர கிலோ மீற்றர் ஆகும்
இலங்கையின் தலைநகரம் ஸ்ரீஜெயவர்த்தனபுரக் கோட்டை

ஆக்கம்: ஜெ தர்மியவாணி
தாரகை சிறுவர் கழகம்

**சிறுகதை**

## தாய் மனசு

இலங்கையிலே ஒரு சிற்றூரில் வசித்து வந்தான் வசந்தன். இவனுடைய தந்தை இவனுடைய சிறுவயதிலேயே இறந்து விட்டார். இதனால் இவன் தாய் கமலா இவனை மிகவும் பௌத்திரமாக வளர்த்தாள். ஒரு பிள்ளை என்பதால் அவனை எப்படியாவது படிக்க வைக்க வேண்டும் என்று மிகவும் கஸ்ரப்பட்டு படிக்க வைத்தாள். அவனும் அவனுடைய தாயின் ஆசைப்படி நன்றாகப் படித்து பெரியவன் ஆகினான். ஆவன் எப்படித்தான் படித்தாலும் பெரியவனாக வளர்ந்தாலும் அவனுடைய மனதுக்குள் ஒரு உறுத்தல். அவனுடைய தாயை எல்லோரும் முட்டக்கண்ணி என்றுதான் அவன் முன்னாலும் கூப்பிடுவது. அவனைக் கண்டால் முட்டைக்கண்ணி மகன் என்றும் கூப்பிடுவது அவனுக்கு வெட்கமாகவும், வேதனையாகவும் இருந்தது. இவ்வாறு பல நாட்கள் ஓடின. இவனுக்கு மேல்படிப்பு படிப்பதற்கு இந்தியாவில் அனுமதி கிடைத்தது. அவன் மிக சந்தோஷமடைந்தான். அவன் தாயின் ஆசைப்படி மேல்ப்படிப்பு படித்தான். பின் தாய் கமலா இவனின் சம்மதத்திற்கு இணங்க இவனிற்கு திருமணம் செய்து வைத்தார். திருமணம் முடிந்த பின்பு இவன் மீண்டும் இந்தியா சென்றான். இந்தியா சென்ற மகனை பல வருடமாகப் பார்க்கவில்லை என்றும் தனது பேரப்பிள்ளைகளையும் காண்பதற்காக தாய் இலங்கையில் இருந்து இந்தியா சென்றாள். "தான் ஆடாவிட்டாலும் தசை ஆடும் என்பார்கள்". அதே போல்த்தான் இந்தத் தாயும். அங்கு சென்ற தாயை மிகவும் நன்றாக கவனித்து தன் தாய்க்கு ஏற்றமாதிரி நடந்து கொண்டான். பின்பு தாயை ஓரமாகக் கூப்பிட்டு ஏன் இங்கு வந்தாய் உன்னை எல்லோரும் முட்டைக்கண்ணி முட்டைக்கண்ணி என்று எல்லோரும் கூப்பிடுவது எனக்கு அங்கு வெட்கமாக இருந்தது. இப்ப நீ இங்கு வந்து முட்டைக்கண்ணின்ரை பேரப்பிள்ளைகள் என்று கூப்பிடுவதை நான் விரும்பவில்லை. நீ மீண்டும் இலங்கைக்கு போ என்று கூறியதும் வேடனின் அம்பில் பட்ட மான் துடிப்பதைப் போல் துடித்து மகனிடம் சொல்லாது இலங்கை வந்து சேர்ந்தாள். மகனின் வார்த்தை அவளுக்கு முட்களாக குத்தின. சில நாளில் இவள் உடல்

நிலை மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது. தூன் இறக்கும் போது தன் ஒரே மகனை பார்க்க முடியாது போய் விடுமோ என்று நினைத்து தன் கையால் மகனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். எழுதி முடித்த பின்பு தன் நெஞ்சோரமாக அந்தக் கடிதத்தை அணைத்துக் கொண்டாள். அப்பொழுது அவள் உயிர் உடலை விட்டு பிரிந்து விட்டது. இந்த விடயத்தை ஊர் மக்கள் ஒன்று கூடி ஆலோசித்த பின் மகனுக்கு தந்தி அனுப்பினார்கள். மகன் உடனடியாக ஊருக்கு வந்தான். வந்ததும் அவன் கையில் உன் அம்மா உன்னிடம் கொடுக்கச் சொன்ன கடிதம் என்று தடிதத்தை கொடுத்தார்கள். அவன் வாசித்தான்.

அன்பின் மகனிற்கு அம்மா எழுதிக் கொள்வது நீ என்னை முட்டைக்கண்ணி என்று ஊராக்கள் கூப்பிடுவதை வெட்கமாக நினைத்தாய். ஏன் என்னை முட்டைக்கண்ணி என்று கூப்பிடுகிறார்கள் தெரியுமா? நீ சிறியவனாக இருக்கும் போது பட்டாசு கொழுத்தினாய் அப்பொழுது பட்டாசுப் பொறிபட்டு உன் கண் தெரியாமல் போய் விட்டது. அப்போது நான் என் கண்ணை வைத்தியர் மூலம் உனக்கு வைத்தேன். இதனால்த்தான் கண் எனக்கு இப்படி வந்தது. மகனே என் பேரப்பிள்ளைகளையும் என் கண்ணையும் பௌத்திரமாக பார்த்துக்கொள் என்று கடிதத்தை முடித்திருந்தாள். இதைப் புரியாத மகன் தாயின் மனதைப் புரியாது தான் இவ்வாறு நடந்து விட்டேனே. ஊரார் கூப்பிடுகிறார்கள் என்று நானும் என்தாயை வெறுத்து விட்டேனே என்று நினைத்து வாய் விட்டு அழுதான். தன் சோகத்தை தனக்கே சொல்லிக் கொண்டான்.

ஆக்கம்: ம கெலன்
தரகை சிறுவர் கழகம்

[illegible] - 12.08.2005
[illegible]
[illegible]
[illegible] - 1945

## விடுகதைகள்

1.ஒரு கிணற்றில் ஒரு தவளை அது என்ன?
நாக்கு

2.தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான் அவன் யார்?
இளநீர்

3.வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல் அது என்ன?
முட்டை

4.பூமியில் போட்டால் திருப்பி எடுக்க முடியாது அது என்ன?
கோலம்

5.காய்க்கும், பூக்கும், கலகலக்கும் காகம் இருக்க கொப்பில்லை அது என்ன?
நெற்பயிர்

ஆக்கம்: ஜெ ஜிதேப்பிரிதன்
மொட்டுக்கள் சிறுவர் கழகம்

## தயக்கம்

பெண்ணுக்கு தேவை தன்மானம்
ஆணுக்கு தேவை தீர்மானம்
ஏழைக்கு தேவை அன்னதானம்
எல்லோருக்கும் தேவை சமாதானம்
சூரியன் தயங்கினாலும் தாமரை மலருமா
கரை தயங்கினால் அலை அடிக்குமா
வானம் தயங்கினால் நிலவு தோன்றுமா
சமாதானம் தயங்கினால் சந்தோசம் கிடைக்குமா

ஆக்கம்: பிரான்சிஸ் கயிற்சலா
கிரியை புரி

புத்தாண்டு பரிசு தந்த

பாவையே உந்தனுக்கு
செத்தாலும் உனை மறவா
சிந்தையின் அன்பு மடல்
கட்டையிலே வெந்தாலும்
கலங்காது கமல மனம்
என்றுரைத்தார் காரிகையே
இன்று நான் நிஷ்டையிலே
இருந்துதான் நினைக்கின்றேன்

உன் நினைவை
ஆக்கம்: பிரான்சிஸ் கயிற்சலா

## முன்னுரிமை

அழகிற்கு அல்ல
அறிவுக்கு முன்னுரிமை
பணத்திற்கு அல்ல
பாசத்திற்கு முன்னுரிமை
காதலுக்கு அல்ல
கல்விக்கு முன்னுரிமை
உபதேசத்துக்கு அல்ல
உதவிக்கு முன்னுரிமை
ஆசைக்கு அல்ல
அன்புக்கு முன்னுரிமை
ஊருக்கு அல்ல
உறவினருக்கு முன்னுரிமை
அன்பருக்கு அல்ல
நண்பருக்கு முன்னுரிமை
பருவத்திற்கு அல்ல
பண்பிற்கு முன்னுரிமை
மூத்தவர்க்கு அல்ல
முதியவருக்கு முன்னுரிமை

வாழ்க்கைக்கு அல்ல
வாழ்வதற்கு முன்னுரிமை
கற்பித்தலுக்கு அல்ல
கற்றலுக்கு முன்னுரிமை

ஆக்கம்: பா தேனுஜா
தாரகை சிறுவர் கழகம்

## அதிகரித்து வரும் குற்றச்செயல்களும் சீரழிந்து வரும் மாணவர் சமுதாயமும்

இன்றைய உலகம் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றது. போதைப் பொருள், கொலை, வன்செயல்கள், விபச்சாரம் போன்ற பிரச்சினைகளை உலகம் எதிர் கொள்கின்றது. இவற்றுள் விபச்சாரம் எனும் சட்ட விரோத செயலே குற்றச் செயலில் மிக கொடியது. அதிகரித்து வரும் இத்தகைய குற்றச் செயல்களில் தற்போது பாடசாலை மாணவர்களும் ஈடுபடுகிறார்கள் என்பதே அதிர்ச்சிக்குரிய ஒரு விடயமாகும். அண்மையில் எமது நாட்டின் கல்வித்தரம் வீழ்ச்சி கண்டுள்ளது என்பதை அறியாதவர் யாரும் இருக்க முடியாது. கல்வித்தரம் வீழ்ச்சி அடைவதற்கு இத்தகைய குற்றச் செயல்களும் ஒரு காரணமாகின்றது. குற்றச் செயல்கள் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகரிக்கின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு இச் சமுதாயம் சீரழிந்து வருகின்றது. அதுவும் சமூகத்தில் வாழும் இளைய தலைமுறையினரே பெரிதும் பாதிக்கப்படுவதுடன் சீரழிந்தும் வருகின்றார்கள். நாகரீகம் எனும் போர்வையில் இன்றைய இளஞ் சமுதாயம் சீரழிந்து வருகையில் எதிர்காலம் என்ன நேருமோ என்ற அச்சம் உலகிற்கு பெரும் தலையிடியாக உள்ளது. இன்றைய இளஞ் சமுதாயம் சீரழிந்து வருவதற்கான மிக முக்கியமான காரணம் வறுமையும், சனத்தொகை வளர்ச்சியுமாகும்.

சனத்தொகை அதிகரிக்க வறுமை நிலையும் அதிகரிக்கின்றது. இதனால் குற்றச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. அது மட்டுமல்லாமல் பெற்றோரின் கவலையீனமும் வாழும் சூழ்நிலையும் இளந்தலைமுறையினர் தறிகெட்டு தவறான பாதையில் செல்வதற்கு

வழி வகுக்கின்றது. இன்றைய நவீன யுகத்தில் குடும்பத்தலைவர்கள் வேலைக்குச் செல்லும் காலம் போய் குடும்பத் தலைவிகளும் வேலைக்குச் செல்லத் தொடங்கி விட்டனர். இதன் காரணமாக கவனிப்பாரற்ற பிள்ளைகள் தவறான வழிகளில் செல்கின்றனர். இத்தனைக்கும் காரணம் வறுமையும், சனத்தொகைப் பெருக்கமுமே ஆகும் என்று கூறுவதில் தவறில்லை. இவற்றின் மேல் கொடிய குற்றச் செயலாக பாலியல் வல்லுறழ்வு கருதப்படுகின்றது. பாலியல் வல்லுறழ்வுக்கு ஆளான பெண்கள் தமது எதிர்காலத்தையும் தொலைத்துக் கொள்கின்றார்கள். பாலியல் வல்லுறழ்வு என்பது பெரிய நாடுகளில் மட்டுமன்றி வல்லரசு நாடுகளிலும் காணப்படுவதுடன் முழு உலகமுமே எதிர்கொள்ளும் ஒரு பொதுவான பிரச்சினையாக கருதப்படுகின்றது.

இதன் மூலம் உலக மக்கள் எச்.ஐ.வி எனும் பயங்கர ஆட்கொல்லியான எயிட்ஸ் எனும் நோய்க்கு ஆளாகி வருகின்றனர். இந்த நோய்க்கு பலியாவோர் தொகை வருடாவருடம் அதிகரித்துச் செல்கின்றது. அது மட்டுமல்லாது இந் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் இறப்பும் அதிகரித்துச் செல்லப்படுகின்றது. உலகில் எயிட்ஸ் நோய் அதிகரித்து வரும் நாடுகளில் ஆபிரிக்க நாடுகளே முதலிடம் வகிக்கின்றது. இவற்றிற்கெல்லாம் காரணம் வறுமை என்பதே பலரது கருத்தாகின்றது. இந்த வறுமை எனும் பதத்தின் விளைவாக கொலை, கொள்ளை, போதை, மருந்துப்பாவனை, கடத்தல், விபச்சாரம் போன்ற பிரச்சினைகள் தோன்றுகின்றது. இத்தகைய குற்றச் செயல்கள் பெருகுவதை தடுக்க முடியாது. மாறாக தகுந்த நடவடிக்கை எடுப்பதன் மூலம் குறைத்துக் கொள்ளலாம். மேலும் மேலும் புதிய குற்றச் செயல்கள் தோன்றாமல் பார்த்துக் கொள்ளல் வேண்டும். இத்தகைய குற்றச் செயல்களைத் தடுக்க மக்கள் விழித்தெழ வேண்டும். சட்ட விரோத செயல்களுக்கு எதிராக போராட வேண்டும். தீய பழக்கங்கள், குற்றச் செயல்கள் போன்றவற்றை ஒழிக்க வேண்டும். அப்போதுதான் வளமான ஒரு நாடும் சமுதாயமும் தோன்றும்.

ஆக்கம்: தி ஜனனி
தாரகை சிறுவர் கழகம்

# நாகராஜாவும் எறும்புகளும்

ஒரு காட்டில் நாகராஜா வசித்து வந்தது. அது முட்டை, பல்லி, எலி, தவளை, முயல் முதலான சிறு பிராணிகளைத் தின்று வாழ்ந்து வந்தது. இப்படியே தினமும் உண்டு நாள் முழுதும் சோம்பலுடன் கழித்து காலப் போக்கில் அது மிகவும் பெருத்து விட்டது. கூடவே கர்வமும் தலைக்கேறி விட்டது.

ஒரு நாள் இந்த நாகம் இந்தக் காட்டில் வசிக்கும் விலங்குகளிடையே நான்தான் மிகுந்த பலசாலி. நானே இந்தக் காட்டிற்கு தலைவன், என் உருவத்துக்கும் மதிப்பிற்கும் ஏற்ப ஒரு பெரிய வீட்டிற்குக் குடிபோக வேண்டும் என்று நினைத்தது.

ஆகையால் மிகப் பெரிய ஒரு மரத்தை தன் வீடாக தேர்ந்தெடுத்தது. அருகில் ஒரு எறும்புப் புற்றும் என் எதிரில் இருக்கக் கூடாது என்று எண்ணியது. எனவே அது புற்றின் அருகில் சென்று அந்த எறும்புகளைப் பார்த்து நான்தான் நாகராஜா. இந்தக் காட்டிற்கு அரசன், உடனே இந்த இடத்தை விட்டுப் போய்விடுங்கள். இது என் கட்டளை என்று கூறியது.

மற்ற எல்லா விலங்குகளும் நாகராஜாவைப் பார்த்து மிரண்டு நடுங்கின. ஆனால் அந்த சின்னஞ்சிறு எறும்புகள் பயப்படவில்லை. அதனால் ஆத்திரமடைந்த நாகராஜா தன் வாலால் எறும்புப் புற்றின் மீது ஓங்கி அடித்தது. உடனே ஆயிரக்கணக்கான எறும்புகள் படை வீரர்களைப் போல புற்றிலிருந்து வெளியே வந்தன. அவை நாகராஜாவின் உடல் முழுதும் ஏறி நன்றாக கடிக்கத் தொடங்கின. ஆயிரக் கணக்கான எறும்புகள் உடலின் மீது ஏறி கடித்ததால் வலி தாங்க முடியாமல் நாகராஜா மிகவும் துடித்தது. எறும்புகளிடமிருந்து தப்பிக்கத் தன் உடம்பை ஆட்டி அசைத்து தரையில் உருண்டு புரண்டது. வெகு நேரம் இவ்வாறு வலியால் துடிதுடித்து முடிவில் அது இறந்தது. (வீண் கர்வ வீழ்ச்சி தரும் பலன்)

ஆக்கம்: ***J*** ஜெறோயின்
மொட்டுக்கள் சிறுவர் கழகம்

# முட்டாள்ச் சிங்கம்

ஒரு சிங்கத்துக்கு ஒரு நாள் பசி எடுத்தது. பசியாறிட தன் குகையிலிருந்து விலங்குகளைத் தேடி வெளியில் வந்தது. வழியில் ஒரு முயலைப் பார்த்தது. முயல் ஒரு மரத்தின் கீழ் மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருந்தது. சிங்கம் முயலின் பக்கம் நடக்கத் தொடங்கியது. சிங்கத்தைக் கண்டு நடுங்கிய முயல் பயத்துடன் ஓடியது. சிங்கம் முயலைத் துரத்தியது. விரைவில் சிங்கம் முயலைப் பிடித்தது. முயலை அடித்துக் கொள்ள கையை ஓங்கிய சிங்கம் ஒரு மானைக் கண்டது. இந்தச் சிறிய முயல் தன் பசிக்குப் போதாது என்று எண்ணி முயலை விட்டு விட்டு மானைத் துரத்தியது. மான் மிகவும் விரைவாக ஓடியது. சிங்கத்தால் துள்ளி ஓடும் மானை பிடிக்க முடியுமா என்ன? நெடுந்தூரம் துரத்திய பின் சிங்கம் களைப்பு அடைந்தது. துரத்துவதை நிறுத்தி விட்டது. கைக்கு எட்டிய முயலையும் விட்டேனே என மனம் வருந்தியது.(பேராசை பெரும் நட்டம்)

ஆக்கம்: *J* ஜெறோயின்
மொட்டுக்கள் சிறுவர் கழகம்

# இளம் சாதனையாளர்



சென் ஜோன் பொஸ்கோ ஆரம்ப பாடசாலையில் கற்று 2003ம் ஆண்டு புலைமைப் பரிசு பரீட்சையில் 172 புள்ளிகளைப் பெற்று யாழ் மாவட்டத்தில் 01ம் இடத்தைப் பெற்ற செல்வன் விஜயரட்ணம் விதுஷன் என்பவருடன் நாம் மேற்கொண்ட உரையாடல் வடிவம் கீழே

வணக்கம் விதுஷன்

வணக்கம்

- 2003ம் ஆண்டு புலைமைப் பரிசு பரீட்சையில் யாழ் மாவட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளீர்கள். இவ் முடிவை அறிந்தவுடன் உங்கள் மனநிலை எவ்வாறு இருந்தது?

மிகவும் சந்தோஷமாக இருந்தது. வீட்டிலே அனைவரும் பாராட்டினார்கள். அதே போல் பாடசாலையிலும் பாராட்டினார்கள். மிக மிக மகிழ்ச்சியாக இருந்தது.

❖ நீங்கள் புலைமைப் பரிசுப் பரீட்சைக்காக கற்கின்ற போது யாழ் மாவட்டத்தில் 01ம் இடம் பெற வேண்டும் என்ற குறிக்கோளுடன் கற்றீர்களா?

இல்லை. சிறந்த முறையில் நல்ல புள்ளிகளைப் பெற்று சித்தியடைய வேண்டும் என எண்ணினேன். ஆனால் அதற்கான முயற்சியின் பலனாக யாழ் மாவட்டத்தில் 01ம் இடம் கிடைத்தது மகிழ்ச்சியளித்தது.

❖ உங்களது இச்சாதனையின் பின்னணியில் இருப்பவர்கள் யார்?

எனக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்கள், பெற்றோரைக் குறிப்பிடலாம். அதே வேளை நானும் மிகவும் விருப்புடனும், ஊக்கத்துடனும் கல்வி கற்றேன்.

❖ வீட்டிலே நீங்களே கல்வி கற்பீர்களா? அதாவது பெற்றோர்கள் படி என்று உங்களை வற்புறுத்துவார்களா?

இல்லை. பெற்றோர்கள் அவ்வாறு வற்புறுத்துவதில்லை. ஏனெனில் நான் சுயமாகவே குறிப்பிட்ட நேரத்திற்கு வீட்டிலே கல்வி கற்பேன்.

❖ கல்வி தவிர்ந்த வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவதுண்டா?

ஆம். விளையாட்டிலே பூப்பந்தாட்டம், சதுரங்கம் பேன்றவற்றில் ஆர்வமுடன் ஈடுபடுவேன். குருளைச் சாரணர் இயக்கத்திலும் இருந்தேன்.

❖ கலைத்துறையில் ஆர்வமில்லையா?

இசை மிகவும் பிடிக்கும். இப்போது மிருதங்கம் பழகுகிறேன்.

❖ இவ்வாறான செயற்பாடுகளில் நீங்கள் ஈடுபட பெற்றோர் முழுமனதுடன் சம்மதித்தார்களா? அல்லது உங்கள் பிடிவாதத்தால் சம்மதித்தார்களா?

இல்லை. வீட்டிலே கல்வி தவிர்ந்த ஏனைய செயற்பாடுகளில் நான் ஈடுபட சம்மதித்ததோடு ஆதரவும் வழங்கினார்கள்.

❖ புலைமைப் பரிசுப் பரீட்சையில் யாழ் மாவட்டத்தில் 01ம் இடம்

பெற்றது போல் வேறு துறைகளில் யாழ் மாவட்டத்தில் வெற்றி பெற்றுள்ளீரா?

வெற்றி எனக் கூற முடியாது. ஆனால் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சதுர்க்கத்தில் நடைபெற்ற சிறுவர் கருத்தரங்கில் யாழ் மாவட்டத்திலிருந்து நானும் சில நண்பர்களும் கலந்து கொண்டோம். அங்கு நான் யாழ் மாவட்ட சிறுவர்கள் சார்பாக உரையாற்றினேன்.

❖ வீட்டிலே தொலைக்காட்சி பார்ப்பது கல்வியைப் பாதிக்கும் எனக் கூறுவார்கள். நீங்கள் தொலைக்காட்சி பார்ப்பதுண்டா?

தொலைக்காட்சி நான் பார்ப்பேன். ஆனால் சில நிகழ்ச்சிகளையும், செய்திகளையும் பார்ப்பேன். கூடிய நேரம் தொலைக்காட்சியோடு செலவழித்தால் கல்வி பாதிக்கப்படும்.

❖ இனிவரும் காலங்களில் புலமைப் பரிசுப் பரீட்சையில் பங்குபற்ற இருக்கும் மாணவர்களுக்கு நீங்கள் கூறும் கருத்து என்ன?

புலமைப் பரிசுப் பரீட்சைக்கு கணித அறிவு அவசியம். எனவே கணிதத்தில் கூடிய கவனம் செலுத்துவதோடு கூடிய வாசிப்பு பழக்கத்தையும் உருவாக்க வேண்டும்.

எம்மோடு சில மணிநேரம் செலவழித்தமைக்கு நன்றி கூறுவதோடு உமது எதிர்கால இலட்சியத்தை அடைய எமது வாழ்த்துக்கள்.

நன்றி

❖ அன்பு காட்டு ஆனால் அடிமையாகி விடாதே
❖ இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து போகாதே
❖ பணிவாய் இரு ஆனால் கோழையாய் இராதே
❖ கண்டிப்பாய் இரு ஆனால் கோபப்படாதே
❖ [illegible] இரு ஆனால் [illegible] இராதே
❖ பொருளைத் தேடு ஆனால் பேராசைப்படாதே
❖ தர்மம் செய் ஆனால் ஆண்டியாகி விடாதே

## அன்பான சகோதர சகோதரிகளே...

எமது நாட்டில் சமாதானம் நிலவ வேண்டிய அவசியம் பற்றி பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலிருந்து நான் எழுதுகிறேன்.

கடந்த மூன்று வருடங்களாக எமது நாட்டில் நிலவும் சமாதானத்தின் சுகத்தையும், இனிமையையும் நாம் அனுபவித்து வருகின்றோம். இது மேலும் நீடித்து நிலைக்க வேண்டும்.

எமது அடிப்படை உரிமையாகிய கல்வியைப் பயமின்றி, தடையின்றி நாம் பெறவேண்டும். இதற்கு சமாதானம் மிகவும் அவசியமாகின்றது.

இத்தனை காலமாக போரின் தாக்கத்தாலும், போக்குவரத்து வசதியின்மையாலும், வெளி உலகுடன் எதுவித தொடர்புகள் இன்றியும் கிணற்றுத் தவளையாக இருந்த நான் இன்று உங்கள் முன் நிற்கின்றேன் என்றால் அதற்குக் காரணம் தற்போது நாட்டில் நிலவும் அமைதி என கூறவிரும்புகிறேன்.

"நிழலின் அருமை வெய்யிலில் தான் தெரியும்". சமாதானத்தின் தேவை போர்க்கொடுமையில் தான் விளங்கும். எனவே நான் அனுபவித்த போரின் கொடுமை பற்றி சிறிது கூறினால் சமாதானத்தின் அவசியத்தை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்ள என நினைக்கிறேன்.

நான் போர்க்காலத்திலேயே பிறந்தேன். துப்பாக்கிச் சூடுகளுக்கும், எறிகணைத் தாக்குதல்களுக்கும், விமானக் குண்டு வீச்சுகளுக்கும் இடையே பதுங்கு குழியிலும் அங்கும் இங்கும் பெற்றோருடன் இடம்பெயர்ந்தும் வளர்ந்தோம்.

போரின் கோரங்களுக்கு மத்தியில் என்னை வளர்க்கப்பட்ட கஸ்டங்கள் பற்றி என் பெற்றோரின் கண்ணீர் கதைகளில் இருந்து அறிந்து கொண்டேன். நான் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்த போது நான் போரின் பயங்கரத்தை முழுமையாக அனுபவித்தேன். பாடசாலை சென்று கல்வி பயிலும் போது திடீரெனக் கேட்கும் குண்டுவீச்சு, எறிகணைச் சத்தங்களால் பதறிப்போவேன். பாடத்தில் மனம் பதியாது நெஞ்சு படபடக்கும், கை கால் நடுங்கும், தலை சுற்றும், வீட்டிற்கு போக மனம் துடிக்கும்.

எங்கு பார்த்தாலும் அழிவு, பாடசாலைகள், வீடுகள், கட்டடங்கள் யாவும் உடைந்து நொறுங்கிய காட்சி, உணவுக்குத்

தட்டுப்பாடு, கிடைக்கும் உணவை உண்ணமுன் பதுங்குகுழி சென்று பதுங்க வேண்டிய நிலை. எமது நாட்டின் போர் இடம்பெறாத பகுதிகளில் உள்ள எம் போன்ற சிறார்கள் மகிழ்ச்சியுடன் பாடசாலை சென்று படித்து விளையாடும் போது எம் நிலை என்ன? எமக்கு ஏன் இந்தக் கதி? பயத்தால் பீடிக்கப்பட்ட மனம் படிப்பில் எப்படிக் கவனம் செலுத்தும்.



போரினால் பெற்றோரை இழந்தோர், வீடு வாசல்களை இழந்தோர், அங்கவீனமானோர், இதனால் மகிழ்ச்சியை இழந்தோர் எனப் பல சிறுவர் உள்ளனர். எம்மைப் போன்ற இச்சிறுவர் பாடசாலை செல்ல முடியாமல் தவிக்கின்றனர்.

போரினால் இயல்பு வாழ்க்கை பாதிப்பு அடைகின்றது. மக்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் போகின்றது. எங்கும் ஒரே வறுமை. உணவு, உடை, இருப்பிடம் எல்லாமே கேள்விக்குறி. இந்நிலையில் எமது கல்வி பற்றி யார் சிந்திப்பார்?

பாடசாலைகள் பல குண்டுவீச்சில் அழிந்துவிட்டன. மிகுதி உடைந்து உள்ளன. போர்ச் சூழ்நிலையில் இலவசப் பாடப் புத்தகங்கள், சீருடைத்துணிகள் நேரகாலத்திற்கு கிடைப்பதில்லை. இதனால் கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைகின்றன. இரவில் படிப்பதற்கு மின்சாரம் இல்லை. மண்ணெண்ணையோ விலை அதிகம். ஆனால் நாடு முழுவதும் பொதுப்பரீட்சைகள் வழமைபோல் நடைபெறுகின்றன. விளைவு எமது பெறுபேறுகள் மிகவும் பின்னிலை அடைகின்றன.

தற்போது நாட்டில் நிலவுவது அமைதி. இது சமாதானத்திற்கு முந்திய வெறும் அமைதி மட்டுமே. இந்நிலையில் நாம் ஓரளவு மகிழ்ச்சியுடன் வாழ முடிகின்றது. பயமின்றி தூங்கி எழ முடிகின்றது. இந்நிலையில் நீடித்து நிரந்தர சமாதானம் நிலவினால்த்தான் நாடும், மக்களும் அபிவிருத்தியையும், முன்னேற்றத்தினையும், இவற்றிற்கு அடிப்படையான கல்வியையும் பெற முடியும்.

அமைதி நிலவும் கடந்த இருவருட காலப்பகுதியில் தான் நான் நான்காம், ஐந்தாம் தரங்களை கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் திறமையாக சித்தியடைய முடிந்தது. இது எனக்கு மிக்க மகிழ்ச்சி.

எனினும் எமது பகுதியில் இன்னும் பலர் அகதி முகாம்களில் தங்கியுள்ளார்கள். அவர்கள் பாடசாலை செல்லாது இருப்பதும் கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும். மேலும் போருக்கான காரணங்களை இனங் கண்டு போரிட்ட இரு சாராரும் அவற்றுக்கான தீர்வை ஒற்றுமை இணக்கப்பாட்டுடன் காணும் போதே நிரந்தர சமாதானம் ஏற்படும்.

எனவே இங்கிருக்கும் அன்பார்ந்த பெரியோர்களே.............

1. நாட்டின் குடிமக்களாக தமிழர்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
2. எமது இருப்பிடம், மொழி என்பவற்றுடன் உரிமை ஏற்கப்படல் வேண்டும்.
3. இதுவரை காலமும் பாடப்புத்தகங்களில் சரியான முறையில் எழுதப்படாத தமிழர் வரலாறு சரியான முறையில் எழுதப்படல் வேண்டும்.
4. யாவருக்கும் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற மனித அடிப்படைத் தேவைகள் கிடைப்பது உறுதி செய்யப்படல் வேண்டும்.
5. யாவருக்கும் எத்துறையிலும் சமஉரிமை, சமவாய்ப்பு, சமசந்தர்ப்பம் கிடைப்பது உறுதி செய்யப்படல் வேண்டும்.
6. நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் போன்ற உயர் சிந்தனை நாட்டுப்பற்று, இனப்பற்று மக்கள் மனதில் வளர்க்கப்பட வேண்டும்.

ஆகவே கிடைக்கப்பெற்ற அமைதிநிலை நிரந்தர சமாதானமாக விளங்க நாம யாவரும் பாடுபட வேண்டும் எனக் கூறி எனக்கு இந்நிகழ்வில் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்தவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். போரினால் பாதிப்படைந்துள்ள எமது பிரதேசத்தையும், மக்களையும் நீங்கள் நேரில் வந்து பார்த்து சமாதானத்தை நிலை நாட்ட அன்பான அழைப்பை உங்கட்கு விடுத்து விடைபெறுகின்றேன்.

நன்றி

வணக்கம்

# சிறுவர் ஆண்டுக்கான எனது ஆக்கம்

பெயர் :- ..............................................................................

முகவரி :- ..............................................................................

..............................................................................

பாடசாலை :- ..............................................................................

..............................................................................

தலைப்பு :- ..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

## ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர் குழு
சிறுவர் குரல் சஞ்சிகை
C/O விழி உளசமூக மேம்பாட்டு அமையம்
17/4, றெயில்வே வியூ, கச்சேரியடி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## தேசிய சிறுவர் ஆண்டில் பிள்ளைகளுக்கு நாம் செயற்படுவோமா?

* சிறுவரின் நலனில் அக்கறை கொண்டவர்கள் சிறுவர்களைப் பாதுகாக்கவும் முன்றேற்றமடையச் செய்யவும் முயற்சி செய்து வரும் இக்காலகட்டத்தில் இலங்கை அரசு 2006ம் ஆண்டினை சிறுவர் ஆண்டாகப் பிரகடனம் செய்துள்ளது.

* இவ்வாண்டு பெரியவர்களின் ஒத்துழைப்புடன் சிறுவர்கள் பல்வேறு முயற்சிகளில் எமது சிறுவர்கழகங்களில் ஈடுபடுகின் றனர

* பங்களிப்பு என்பது சிறுவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது எமது நகரங்களில், கிராமங்களில், நாட்டில் சிறுவர்களுக்காக சிறுவர்களாகிய நாம் என்ன செய்யப்போகின்றோம்.

* எமது சிறுவர் கழக சிறுவர்கள் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இதனைப் படித்த பின்பு நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்? இவ்வாண்டை சிறுவர்கள் சிறுவர்களுக்காக செயற்படுகின்ற ஆண்டாக்க எம்மால் முடியுமா?

*பிள்ளைகள் நாளைய தலைவர்கள் மட்டுமல்ல.....*

# இன்றைய பிரஜைகளும் தான்...!

தகவல்களுக்கும், ஆலோசனைகளுக்கும்.
விழி உளசமூக மேம்பாட்டு அமையம்
17/4, றெயில்வே வீதி, கச்சேரியடி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

NOBLE PRINTERS 103, PALALY ROAD, JAFFNA.